விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 338 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 06 புதன்கிழமை (22.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு நல்லூரில் நேற்று திறப்பு



(யாழ்ப்பாணம்)


மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் நல்லூரில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரை தியாகம் செய்த போராளிகளை நினைவுகூரும் மாவீரர் வாரம் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.

இதனையொட்டி யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு நேற்று மாலை 6 மணியளவில் 15



### பாராளுமன்றத்தில்
## ஆளுந் தரப்பினர் கடும் அட்டகாசம்



(கொழும்பு)

- எதிர்க்கட்சித் தலைவர் சஜித்திடமிருந்து ஆவணங்கள் பறிப்பு.
- உரையாற்ற விடாது ஒலிவாங்கியை முடக்கினர்.
- கடும் அமளி துமளியை அடுத்து சபை ஒத்திவைக்கப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## நினைவேந்தலை தடுக்க முடியாது
### மானிப்பாய் பொலிஸாரின் மனு நீதிமன்றால் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வார நினைவேந்தலை மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 15

## வடக்கு அபிவிருத்திக்கு பூரண ஒத்துழைப்பு
### வட மாகாண ஆளுநரிடம் எரிக் சொல்ஹெய்ம் உறுதி



15

## சித்தங்கேணியில் உயிரிழந்த இளைஞனுக்கு நீதி கோரி
### சடலத்துடன் பொதுமக்கள் போராட்டம்




05

### சித்தங்கேணி இளைஞன் மரணம்
## 4 பொலிஸ் உத்தியோகத்தர்கள் குற்றத்தடுப்பு பொலிஸாரின் கட்டுப்பாட்டில்

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணி இளைஞர் மரணத்துடன் தொடர்புடைய நான்கு பொலிஸ்உத்தியோகத்தர்கள், தற்போது விசாரணைகளுக்காக, யாழ் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவின் கட்டுப்பாட்டில் உள் வாங்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரி 15

### எதிர்ப்புக்களை வெளியிட்டு
## நாட்டை பாதாளத்துக்குள் தள்ளக்கூடாது - மகிந்த

(கொழும்பு)

எதிர்ப்புக்களை வெளியிட்டு நாட்டை மீண்டும் பாதாளத்திற்குள் தள்ள முற்படக் கூடாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 16

### இந்திய காவல் படையால்
## 5 இலங்கை மீனவர்கள் கைது

(சென்னை)

இராமேஸ்வரம் அடுத்து தனுஷ்கோடி அருகே எல்லை தாண்டி மீன் பிடித்த தாகக் கூறி இலங்கை 15

### பட்ஜெட்டின் இரண்டாம் வாசிப்பு
## 45 மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)

அடுத்த வருடத்திற்கான பாதீட்டின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு பாராளுமன்றில் நேற்று இடம்பெற்றது.

இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 77 வாக்குகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதன்படி, 45 மேல 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி அறிவித்தல்
## சபை நிதி வேலைத்திட்டம் - 2023
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக கோரப்படுகின்றது.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்விக்கமைய நடாத்தப்படும். எனினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020 (i) ஆம் இலக்க 2021.01.11 ஆம் திகதிய 04/2016 (iii) ஆம் இலக்க 2021.02.18 திகதிய மற்றும் 04/2016 (iv) இலக்க 2023:02.09 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வட மாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராக இருத்தல் வேண்டும். அட்டவணை ஒன்றில் குறிப்பிடப்பட்ட புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராக இருத்தல் வேண்டும். அட்டவணை இரண்டில் குறிப்பிடப்பட்ட வேலைக்கு பொருத்தமான வியாபார பதிவினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 6651) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் 22.11.2023ந் திகதியிலிருந்து 05.12.2023ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு ஆவணங்களில் தயாரித்து மூலஆவணம், நகல்ஆவணம் என தனித்தனி உறைகளிட்டு, தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 06.12.2023ந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவே அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணைகளில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் செலுத்தி அதன் உண்மைப்பிரதியினை கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் 2023.11.30 ஆம் திகதி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளமுடியும்

10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை தகுந்த காரணங்களுடன் நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

அட்டவணை I

| தொ. இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை: கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | i) சங்கரப்பிள்ளை கிளை வீதி புனரமைப்பு, மானிப்பாய் தெற்கு NP/14/41(16)/W/CF/2023/25 | 2.53மி. | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி) | 06.02. 2024 | 25,300.00 | 05.03.2024 |
| 02 | i) CPM வீதி புனரமைப்பு, நவாலி தெற்கு ii) சின்னப்பா வீதி 3ம் கிளை ஒழுங்கை புனரமைப்பு நவாலி கிழக்கு NP/14/41(16)/W/CF/2023/26 | 2.16மி. | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி) | 06.02. 2024 | 21,600.00 | 05.03.2024 |
| 03 | i) பிடாரியம்மன் வீதி 3ம் ஒழுங்கை புனரமைப்பு ஆனைக்கோட்டை ii) சோமசுந்தரம் வீதி உள்ளக வீதிகள் புனரமைப்பு, ஆனைக்கோட்டை iii) கேணிக்கட்டு வீதி புனரமைப்பு, சுதுமலை வடக்கு NP/14/41(16)/W/CF/2023/27 | 3.31மி. | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி) | 06.02. 2024 | 33,200.00 | 05.03.2024 |
| 04 | i) நாச்சிமார்கோவில் வீதி புனரமைப்பு சண்டிலிப்பாய் கிழக்கு NP/14/41(16)/W/CF/2023/28 | 1.00 | 45 நாட்கள் | C9 and C8 (வீதி | 23.01. 2024 | 10,000.00 | 20.02.2024 |
| 05 | i) வைரவர் கோவில் வீதி புனரமைப்பு சண்டிலிப்பாய் மத்தி ii) காளிகோவில் கிளை ஒழுங்கை புனரமைப்பு, சண்டிலிப்பாய் மத்தி iii) கம்மாலை 1ம் குறுக்கு வீதி சண்டிலிப்பாய் வடக்கு NP/14/41(16)/W/CF/2023/29 | 2.77மி | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி) | 06.02. 2024 | 27,700.00 | 05.03.2024 |
| 06 | i) சென் அன்ரீஸ் வீதி புனரமைப்பு, பண்டத்தரிப்பு ii) கண்ணகியம்மன் வீதி புனரமைப்பு, மாகியப்பிட்டி NP/14/41(16)/W/CF/2023/30 | 2.15மி | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி) | 06.02. 2024 | 21,500.00 | 05.03.2024 |
| 07 | i) செம்மண்வயல் வீதி புனரமைப்பு, மாதகல் கிழக்கு ii) ஆத்தியோலை வீதி புனரமைப்பு, பெரியவிளான் NP/14/41(16)/W/CF/2023/31 | 2.08மி | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி | 06.02. 2024 | 20,900.00 | 05.03.2024 |

அட்டவணை II

| தொ. இல | விபரம் மற்றும் கேள்வி இலக்கம் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை: கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்திற்கான தளபாடங்கள் பொருத்துதல் NP/14/41(16)/03/A5/Fu/2023 | 30 நாட்கள் | 23.01.2024 | 11,700.00 | 20.02.2024 |
| 02 | வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்திற்கான வளிச்சீராக்கிகள் பொருத்துதல் NP/14/41(16)/03/A5/AC/2023 | 30 நாட்கள் | 23.01.2024 | 8,250.00 | 20.02.2024 |

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய். (C-7694) 22.11.2023.

# கொலைகாரர்களின் குடியுரிமை இல்லாதொழிக்கப்பட வேண்டும்

## எதிர்கட்சித் தலைவர் சஜித்

கொலைகாரர்களின் குடியுரிமைகள் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்றும் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

நீதித்துறையின் சுதந்திரத்தைப் பிரதிபலித்து நாட்டின் பொருளாதாரத்தை வங்குரோத்தாக்கிய பொருளாதாரக் கொலையாளிகளை அம்பலப்படுத்தி, வரலாற்றுத் தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்கியிருந்தாலும், இத்தரப்பினர் இன்னமும் அரச அனுசரணையின் கீழ் சலுகைகளை அனுபவித்து தங்கள் வழமையான சுகபோக வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர்.

இந்த முடிவை அவர்கள் மதிக்கவில்லை என்றாலும், அவர்களின் தவறான முடிவுகளுக்கு அனைத்து இலங்கையர்களுமே விளைவுகளை ஈடு கட்ட வேண்டியுள்ளதாகவும், இவர்களுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கப்போகும் தீர்மானம் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருப்பதாகவும், எனவே அரசாங்கத்தால் எத்தகைய மெத்தனமான போக்கு ரீதியான நடவடிக்கைகளையும் எடுக்க முடியாது என்பதனால், அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அறிய வேண்டியது அவசியம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச, பசில் ராஜபக்ச, பி. பி. ஜயசுந்தர, அஜித் நிவார்ட் கப்ரால், எஸ்.ஆர். ஆடிகல, டபிள்யூ.டி லக்ஷ்மன், சமந்த குமாரசிங்க மற்றும் நிதிச் சபை இணைந்து இந்த வங்குரோத்தை மேற்கொள்ள ஏற்பாடு செய்துள்ளதாக தெரியவந்துள்ளதாகவும், இவர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார்.

தீர்ப்பின் பிரகாரம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட நபர்களுக்கு எதிரான விடயங்களை ஆராய்ந்து அறிக்கையிடவும், குறித்த நபர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை உடனடியாக நியமித்து, இந்த பொருளாதாரக் கொலைகாரர்களின் குடியுரிமைகள் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்றார். (ம-7)


# பாராட்டி வாழ்த்துகிறோம்

2023 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரீட்சையில்
வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற எமது பேரக்குழந்தைகளான

**செல்வன் கஜேந்திரன் கானுசன் - 183 புள்ளிகள்**
**(யாழ் இந்து ஆரம்ப பாடசாலை)**
**செல்வி சிறீபவன் கனிஷ்கா - 170 புள்ளிகள்**
**(யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை)**

ஆகியோரை மானிப்பாய் மருதடி விநாயகரின் அருள் ஆசியுடன் மேலும் பல பட்டங்களும் பதவிகளும் பெற்று வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

செ.சண்முகசுந்தரம் J.P
மகேஸ்வரி(பேரன்)
முன்னாள் செயலாளர்
கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம்
கொக்குவில் மக்கள் நலன்புரி நம்பிக்கை நிதியம்

(17954)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
# துரைராசா அன்னலட்சுமி

தோற்றம் : 11.06.1942
மறைவு : 03.12.2022

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று (22.11.2023) புதன்கிழமை பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(17955)

இலகடி, கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த வெற்றியால் ஊழல் மோசடிகளை மூடி மறைக்கும் ராஜபக்ஷக்கள்

## அநுர பகிரங்க குற்றச்சாட்டு

**(கொழும்பு)**

**யுத்த வெற்றியைக் கொண்டு மோசடிகளை மூடி மறைக்க வேண்டாம் என ஜே.வி.பி தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் மீதான 6 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் பொருளாதார ரீதியில் எடுத்த தீர்மானங்கள் பொருளாதார பாதிப்பை தீவிரப்படுத்தின.

ஆனால் எந்த அரசாங்கங்களும் நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளவில்லை.

அதனால்தான் 2019 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் பொருளாதார ரீதியில் எடுத்த தீர்மானங்கள் தற்போதைய பொருளாதார பாதிப்புக்கு ஒரு காரணியாக உள்ளது என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

வரவு -செலவுத் திட்டம் சமர்ப்பிக்கும் போது குற்ற ஒப்புதல் வழங்கும் கலாசாரம் தற்போது காணப்படுகிறது.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த கால தவறுகளை திருத்திக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

ஊழல் மோசடியால் நாடு வங்குரோத்தடைந்தது என்பது அனைவரும் அறிந்த விடயம். அரசாங்கத்தின் பல செயற்பாடுகளில் ஊழல் மோசடி காணப்படுவதாக நீதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதற்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார். (நி-5-6)

## கனடா செல்ல முயன்றவர் கட்டுநாயக்காவில் கைது

(கொழும்பு)

போலியான கனேடிய விசாவுடன் கனடா செல்ல முயன்ற நபர் நேற்று முன்தினம் மாலை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

மெல்சிரிபுர, மதஹ பொலவைச் சேர்ந்த 34 வயதுடைய பயணி, துபாய் ஊடாக கனடா செல்லும் விமானத்தில் ஏறுவதற்காக விமான நிலையத்திற்கு வந்ததாக குடி வரவு வட்டாரங்கள் தெரிவித்தன. (நி-5-6)

## பாராளுமன்றில் அமளிதுமளி ஒத்திவைக்கப்பட்ட சபை

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றில் உரையாற்றிய போது சபையில் அமளிதுமளி ஏற்பட்டமையடுத்து சபை நடவடிக்கைகள் 5 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் சபை நடவடிக்கைகள் ஆரம்பபிக்கப்பட்டன.

நேற்று பாராளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பொருளாதார நெருக்கடிக்கு உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு குறித்து உரையாற்றிக் கொண்டிருந்தபோது, அதில் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களின் பெயர்களை உச்சரித்துள்ளார்.

இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவரை சுற்றி வளைத்த ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர் கைகளிலிருந்த ஆவணத்தையும் பறித்துச் சென்றுள்ளதுடன் அவரை பேசவிடாது ஒலிவாங்கியைப் பறித்து இடையூறுகளை ஏற்படுத்தினர்.

இதையடுத்து பாராளுமன்ற சபை நடவடிக்கைகள் 5 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## மாவீரர் தின நினைவேந்தல் பல்கலையிலும் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரம் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாவீரர் தின முதல் நாள் நினைவேந்தல் ஆரம்பமானது.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்களால் மாவீரர் தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அந்தவகையில், பல்கலைக்கழக வளாகத்திலுள்ள மாவீரர் நினைவுத்தூபி அமைந்துள்ள பகுதி பல்கலைக்கழக மாணவர்களால் வர்ணம் தீட்டப்பட்டு புதுப்பொலிவு பெற்றுள்ளதுடன் தூபியைச்சுற்றி சிவப்பு, மஞ்சள் நிறத்திலான் வர்ணக்கொடிகள் கட்டப்பட்டுள்ளன. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தமது உயிரை போராட்டக்களத்தில் தியாகம் செய்தவர்கள் நினைவாக கார்த்திகை 27 ஆம் திகதி மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)

## அரிசி இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

### அமைச்சர் நளின்

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு அடுத்த மாதத்தில் 1 இலட்சம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையைப் பேணும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு அடுத்த மாதத்தில் 1 இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதியைப் பெற்றுள்ளோம். ஆகவே கூடிய விரைவில் அரிசி இறக்குமதியை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

விசேடமாக கீரிச்சம்பா மற்றும் சம்பா அரிசிகளை இறக்குமதி செய்ய நடவ்டிக்கை எடுக்கின்றோம். அதனூடாகவும் நாட்டில் அரிசியின் விலையை கட்டுப்படுத்த முடியவில்லை எனின் தொடர்ந்தும் அதிகளவான அரிசிகளை இறக்குமதி செய்தாகிலும் விலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுப்போம்.

நாட்டிலுள்ள பிரதான அரிசி ஆலை உரிமையாளர்கள் அதிக இலாபம் ஈட்டுவதற்காக இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார்கள்.

ஆகவே அடுத்த வாரத்தில் இருந்து அரிசி இறக்குமதி நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## உத்தேச மின்சாரத்துறை மறுசீரமைப்பிற்கு அமைச்சரவை அனுமதி-காஞ்சன

(கொழும்பு)

உத்தேச மின்சாரத்துறை மறுசீரமைப்பு சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டு அமைச்சர் இதனைத் தெரிவித் தார்.

குறித்த சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர், பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சட்டமூலம் பாராளுமன்றில் நிறைவேற்றப்படுமாயின். இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு. செயற்றிறன். வெளிப்படைத்தன்மை , தனியார்துறை பங்களிப்பு. மின் விநியோகம் மற்றும் பரிமா ற்றம் ஆகியனவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## ராஜபக்ஷக்களின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட வேண்டும்

### முன்னாள் ஜனாதிபதி ஆவேசம்



(கொழும்பு)

நாட்டை வங்குரோத்து செய்தமைக்காக நீதிமன்றினால் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ள நபர்களின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். அதற்காக உலக வங்கியின் விசேட பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு உலக வங்கியின் ஆதரவைப் பெற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

[illegible]டின் பொருளாதாரத்திற்கு பயன்படுத்த முடியும் எனவும் இலங்கையின் கடனை அடைக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததற்கு முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உட்பட 7 பேர் காரணம் என உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற் போது அந்த ஏழு பேரின் குடியுரிமையை இரத்து செய்ய வேண்டும் என எதிர்க்கட்சிகள் பாராளு மன்றத்தில் யோசனை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தேசியமட்ட பளுதூக்கல் போட்டி; வெள்ளி வென்ற நடேஸ்வராக் கல்லூரி



தேசியமட்ட பளுதூக்கல் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை யா/நடேஸ்வராக்கல்லூரி மாணவன் லோகேந்திரராஜா லஜிந்தன் கைப்பற்றி சாதனை படைத்துள்ளார். இலங்கை பளுதூக்கல் சம்மேளனத்தினால் பொலநறுவையில் நடைபெற்ற தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் கனிஷ்ட பிரிவினருக்கான ஆண்களுக்கான 61 கிலோ எடைப்பிரிவில் கலந்து கொண்ட குறித்த மாணவன் 133 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி-5-6)

## ஆஸி வீரரின் ஆணவச்செயல் கொந்தளிக்கும் கிரிக்கெட் உலகம்



அவுஸ்திரேலியா அணி உலகக் கிண்ணத்தை வெற்றி பெற்றதன் பின்னர் ஆஸி கிரிக்கெட் வீரர் மிட்செல் மார்ஷின் செயல் குறித்து பலரும் விமர்சனங்களை வெளியிட்டுள்ளனர்.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற பின்னர், அந்த கிண்ணத்தின் மீது சாதாரணமாக தனது கால்களை வைத்து மிட்செல் மார்ஷ ஓய்வெடுக்கும் புகைப்படத்தை ஆஸி அணித் தலைவரால் வெளியிடப்பட்டது.

அப்புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வெளியாகி வைரலாகி வருகின்றது.

இதனைப் பலரும் "அவமரியாதை" என்று முத்திரை குத்தியுள்ளதுடன் இது தொடர்பில் வலைத்தளங்களில் கண்டனங்கள் வலுப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## அணிகள் பெற்ற பரிசுத்தொகை




ஆடவருக்கான 13 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நிறைவு பெற்றுள்ள நிலையில் போட்டியிட்ட 10 அணிகள் கலந்து கொண்டன.

குழு நிலை போட்டியில் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு வெற்றிக்கும் ஐ.சி.சி 40,000 டொலரை வழங்கியுள்ளது.

இதன்படி அவுஸ்திரேலியா (4.28 மில்லியன்), இந்தியா (2.36 மில்லியன்), தென்னாபிரிக்கா (1.08 மில்லியன்), நியூசிலாந்து (1 மில்லியன்), பாகிஸ்தான் (260,000), ஆப்கானிஸ்தான் (260,000), இங்கிலாந்து (220,000), பங்களாதேஷ் (180,000), இலங்கை (180,000), நெதர்லாந்து (180,000). (நி-5-6)

# ஓரம் கட்டப்படுகிறாரா ரோகித்?

உலகக்கிண்ண போட்டி கடந்த 19 ஆம் திகதி முடிந்த நிலையில் இந்திய ஒருநாள் அணிக்கு புதிய தலைவரை நியமிக்க இந்திய கிரிக்கெட் சபையின் தேர்வுக்குழுத் தலைவர் அஜித் அகார்கார் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதன்படி உலககிண்ணப்போட்டியில் விக்கெட் காப்பாளர் மற்றும் துடுப்பாட்டம் என சிறப்பாக செயற்பட்ட கே.எல்.ராகுலை அணித்தலைவராக நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5-6)



# சம்பியனான ஜோகோவிச்

இத்தாலிய வீரரான ஜொனிக் சின்னரை தோற்கடித்து ஏழாவது முறையாக ஏடிபி பைனல்ஸ் பட்டத்தை வென்று நோவக் ஜோகோவிச் சாதனை படைத்துள்ளார்.

நேற்று முன்தினம் இத்தாலியின் டூரின் நகரில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் 6-3, 6-3 என்ற செட் கணக்கில் வீழ்த்தி நோவக் ஜோகோவிச் வெற்றி பெற்றுள்ளார்.

2008, 2010-11, 2014-15 மற்றும் 2022-23 இல் சம்பியன் பட்டம் வென்ற நோவக் ஜோகோவிச்சிற்கு இது 7 ஆவது ஏடிபி பைனல்ஸ் பட்டமாகும்.




இதேவேளை அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள போட்டிகள் தனது இலக்கு என்றும் நான்கு கிராண்ட்ஸ்லாம்கள் மற்றும் ஒரு ஒலிம்பிக் தங்கம் வெல்ல முடியும் என்கிற நம்பிக்கை உள்ளது என்றும் கூறியுள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரிழந்த இளைஞனுக்கு நீதிகோரி சடலத்துடன் மக்கள் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த இளைஞனுக்கு நீதிகோரி சித்தங்கேணி சந்தியில் சடலத்துடன் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட்டுக்கோட்டை பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த இளைஞன் நாகராசா அலெக்ஸின் இறுதிச்சடங்குகள் நேற்று இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது இளைஞனின் இறுதிச்சடங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தியதை தொடர்ந்து சம்பந்தப்பட்ட பொலிஸாரை கைது செய்யுமாறு கோரியும் உயிரிழந்த இளைஞனுக்கு நீதி வேண்டியும் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

(நி-5-6)





**மாவீரர்களின் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வுகள் நேற்று வடமராட்சி, கிளிநொச்சி மற்றும் முள்ளியவளை பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது.**

**(படங்கள்:-கஜிந்தன், சப்தசங்கரி, சதீஸ், மகாலிங்கம்)**


யா/நெல்லியடி மத்திய கல்லூரி

- தேசிய பாடசாலை -

மாணவர் அனுமதி – தரம் 06 (2024)

நிகழ்நிலை விண்ணப்பம்

விண்ணப்ப முடிவுத் திகதி : 15.12.2023

கீழுள்ள இணைப்பின் மூலம் Online இல் விண்ணப்பிக்க முடியும்.

https://shorturl.at/fFGPV

(C-7692)



## அந்தியேட்டி ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

கடந்த 24.10.2023 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர்.இராமன் சுப்பிரமணியம்**
**(சின்னக்கிளி)**



அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள்
21.11.2023 நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு
கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது.
வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 23.11.2023
நாளை வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால்
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும்
கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(C-7692)

கருணாகரப்பிள்ளையார் கோயிலடி,
ஊறாலை தெற்கு, மயிலங்காடு.

தொ. இல
076 094 9272

தகவல்
குடும்பத்தினர்.



## யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி தரம் 6 அனுமதி-2024

யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் தரம் 6 (2024) இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் கோரப்பட்டுள்ளது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை (2023) இல் 130 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் மட்டும் **(அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட புலமைப்பரிசில் புள்ளிச் சான்றிதழ் கொண்டு வருதல் கட்டாயமானது)** பாடசாலை நேரத்தில் விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணம் 150.00 ரூபாவினை செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் **பதிவுத் தபாலில்** மட்டுமே அனுப்பி வைக்கப்பட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் நேரடியாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பப்படிவம் வழங்க ஆரம்பிக்கும் திகதி:- 22.11.2023

விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி :- 08.12.2023

விண்ணப்பப்படிவம் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி :- அதிபர்,
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி,
அரசடி வீதி, கந்தர்மடம்.

காலதாமதமாகி கிடைக்கப் பெறும் விண்ணப்பப்படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

குறிப்பு:- **கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு நேர்முகத் தேர்வின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.**


## இராசிபலன்

22.11.2023
கார்த்திகை 06, புதன்கிழமை
தசமி முன்னிரவு 10.56 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 7.03 மணிவரை

சுபநேரம் -4.40-6.10 மணிவரை
இராகுகாலம்-12.10-1.40 மணிவரை
அமிர்தசித்தம்

சந்திராஷ்டமம்-
ஆயிலியம், மகம்.

**வளவன்**

**மேஷம்:** வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவ முன்வரலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்:** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**மிதுனம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்:** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**சிம்மம்:** உறவினர், நண்பர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும்.

**கன்னி:** பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தலைமைப் பதவிகள் உங்களை நாடிவரலாம்.

**விருச்சிகம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு:** பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மகரம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்த சேரலாம்.

**கும்பம்:** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் அகலும், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு,கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள்.

**மீனம்:** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பது நல்லது, திட்டமிட்ட காரியமொன்றில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**அதிகம் ஆராய்பவன் சொற்பமாகவே செய்து முடிப்பான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருட்டு தொடர்பில் கைதான நபரொருவர் பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

திருட்டுச்சம்பவம் தொடர்பில் அண்மையில் வட்டுக் கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் முற்படுத்தப் பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்ட சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட கைதி உயிரிழுந்த நிலையில் குறித்த வழக்கு நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது யாழ்சிறைச்சாலையில் விளக்கமறியலில் இருந்து உயிரிழந்தவருடன் கைதாகி தடுத்து வைக்கப்பட்டவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

குறித்த வழக்கை வட்டுக் கோட்டைப் பொலிஸாரிடமிருந்து மாற்றப்பட வேண்டும் என்ற சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் நீதி மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்டது. (நி-5-6-33-104)


## விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினரல் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு வருடகாலத்தைக் கொண்ட இலவச டிப்ளோமா தையல் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் தென்மராட்சிப் பிரதேசசெயலக கிராம அபிவிருத்திப் பிரிவில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொண்டு பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும் என கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரியப்படுத்தியுள்ளார். விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வினை எதிர்வரும் 2023/12/13 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு பிரதேச. செயலக கிராம அபிவிருத்திப் பிரிவில் நடத்தத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6-30)

## சங்கீத, நடனப் போட்டியில் இந்து மகளிர் கல்லூரி சாதனை



(யாழ்ப்பாணம்)

அநுராதபுரத்தில் நடைபெற்ற அகில இலங்கை கர்நாடக சங்கீத பரதநாட்டிய போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் 6 முதல் இடங்களை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி நடைபெற்ற குறித்த போட்டியில் பாரதிதாசன் பாடல் (தனி நடனம்), கவணாடல் (கிராமியம்) குழுநடனம், போதை ஒழிப்பு (செந்நெறி) குழு நடனம், வில்லிசை, தனி இசை மற்றும் வீணை வாசித்தல் ஆகிய ஆறு போட்டிகளில் முதலாம் இடத்தினை பெற்றுள்ளதுடன் கிராமியப்பாடல் (குழு இசை) இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)

## செம்முகம் ஆற்றுகை குழுவின் நாடக விழா

(யாழ்ப்பாணம்)

செம்முகம் ஆறுகைக் குழுவின் நாடகவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இவ் நாடகவிழா மாலை 5 மணிக்கு புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியின் குமாரசாமி மண்டப அரங்கில் இடம்பெறும். அதேவேளை மறுநாள் சனிக்கிழமையும் இடம் பெறவுள்ளது.

நாடக ஆற்றுகையினை பார்வையிட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-5-6)

## கேள்வி அறிவித்தல் - நல்லூர் பிரதேசசபை
## சபைநிதி/அபிவிருத்தி வேலைத்திட்டம்-கட்டம் V

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேசசபை கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வேலைகளுக்காகக் கோரப்படுகிறது.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும். ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020(i) ஆம் இலக்க 2021.01.11 ஆம் திகதி 04/2016(iii)ஆம் இலக்க 2021.02.18 மற்றும் 04/2016(iv) இலக்க 2023.02.09 ஆம் திகதி பொது நிதிச்சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தைச் சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்குப் பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **'தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - **021-222-2700, 021-314-2841**) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை **தலைவர் பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் 2023.11.22 ஆம் திகதியிலிருந்து 2023.12.05 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 03.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக அட்டவணையில் காட்டப்பட்ட தொழிலக்கம் 1 தொடக்கம் 4 வரையான வேலைகளுக்கு **ரூபா 3,000.00** (வரி நீங்கலாக) உம் தொழிலக்கம் 5 இற்கான வேலைக்கு **ரூபா. 6,000.00** (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்வி ஆவணத்தை இரு பிரதிகளில் பூரணப்படுத்தி **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு **2023.12.06** ஆம் திகதி **மு.ப 10.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை** என்ற பெயரில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் **2023.11.29** ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் **மு. ப. 10.00** மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.


| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம், ஒப்பந்த இலக்கம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| சபைநிதி வேலைகள் - 2023 | | | | | | | | |
| 1. | NPS/CF-V/2023/H&S/01 | தலைமை அலுவலகம் மற்றும் களஞ்சிய புனரமைப்பு. | 2.30 | 60 நாட்கள் | C9/ C8/C7 | 63 நாட்கள் | 34,500.00 | 2024.03.05 |
| 2. | NPS/CF-V/2023/Kon.Ay/02 | கோண்டாவில் ஆயுள்வேத வைத்தியசாலை புனரமைப்பு | 2.10 | 90 நாட்கள் | C9/ C8/C7 | 63 நாட்கள் | 31,500.00 | 2024.03.05 |
| 3. | NPS/CF-V/2023/WDO/03 | வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வேலைத்தளம் அமைத்தல். | 7.20 | 90 நாட்கள் | C8/ C7/C6 | 77 நாட்கள் | 108,000.00 | 2024.03.19 |
| 4. | NPS/CF-V/2023/Bo.W/04 | மடம் வீதி மற்றும் திருநெல்வேலி பகுதியில் மதில் அமைத்தல். | 1.16 | 60 நாட்கள் | C9/C8 | 49 நாட்கள் | 17,100.00 | 2024.02.20 |
| அபிவிருத்தி நிதி வேலை - 2023 | | | | | | | | |
| 5. | NPS/CF-V/2023/05 | கொக்குவில் மீன் சந்தை 1ம் மாடி பிகுதி வேலை புனரமைத்தல். | 25.15 | 120 நாட்கள் | C6/ C5/C4 | 91 நாட்கள் | 377,250.00 | 2024.04.02 |

(சி-7693)

2023.11.22

**தலைவர், பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்த நூற்றாண்டின் இறுதியில் உயர்வடையும் உலக வெப்பநிலை

## ஜனாதிபதி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டிற் கான ஐக்கிய நாடுகளின் தீர்வுகளுக் கான அறிக்கையில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் அளித்த வாக் குறுதிகள் மீறப்பட்டுள்ளதுடன், இந்த நூற்றாண்டின் இறுதியில் உலக வெப்பநிலை 3 செல்சியஸால் உயர்வடையக்கூடும் என ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை ஐக் கிய அமெரிக்க சர்வதேச அபி விருத்தி முகவர் நிறுவனமான USAID உடன் இணைந்து நேற்று ஏற்பாடு செய்திருந்த இலங்கை பசுமை ஹைட்ரஜன் மாநாடு - 2023 இல் உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவினால் இலங்கை தேசிய ஹைட்ரஜன் வழிகாட்டல் வரைவு ஜனாதிபதியிடம் கைய ளிக்கப்பட்டது.

அத்துடன் 2030 ஆம் ஆண் டளவில் 1.5 செல்சியஸினால் உலக வெப்பநிலையை மட் டுப் படுத்தவதற்குத் தேவை யான இலக்குகளுடன், காலநிலை அனர்த்தங்களுக் கான உடனடித் தீர்வுகளைச் செயற்படுத்த வேண்டியது அவசியமென இலங்கை பசுமை ஹைட்ரஜன் மாநாடு - 2023 இல் ஜனாதிபதி ரணில் வலியு றுத்தியுள்ளார். (நி-5-6)

# 110 மில்லியன் டொலர் ஒப்பந்தம்

## இலங்கையில் கால்பதிக்கும் அமெரிக்க நிறுவனம்

(கொழும்பு)

உலகின் முன்னணி பெற் றோலிய பொருட்கள் வர்த்தக நிறுவனங்களில் ஒன்றான ஆர்.எம். பாரக்ஸ் நிறு வனத் திற்கும் இலங்கை முதலீட்டு சபைக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள் ளது.

110 மில்லியன் டொலர் ஒப்பந்தத்தின்படி,ஷெல் தயா ரிப்புகள் இலங்கையில் விற் பனை செய்யப்படும் என்றும் இரு நிறுவனங்களும் இலங் கையில் 200 எரிபொருள் நிரப்பு நிலையங்களை இயக் கும் என் றும் கூறப்பட்டுள் ளது.

மேலும் அவற்றில் சிறிய அளவிலான பல்பொருள் அங் காடிகள் மற்றும் வாகனங்க ளுக்கு சார்ஜ் செய்யும் வசதிகள் இருக்கும் என்றும் இலங்கை முதலீட்டுசபை அறிவித்துள் ளது.

அடுத்தாண்டு ஜனவரி மாதம் முதல் 50 எரிபொ ருள் நிரப்பு நிலையங்களை திறந்து பெற் ரோலிய விநி யோக நடவடி க்கைகளை குறித்த நிறுவனம் தொடங்கும் என அறிவிக்கப்பட் டுள்ளது.

இதன்படி ஆர்.எம். பாரக்ஸ் நிறுவனமும் ஷெல் நிறுவன மும் இணைந்து இலங்கையில் 200 எரிபொருள் நிரப்பு நிலை யங்களை இயக்கும் என அறி விக்கப்பட்டுள்ளது. (நி-5-6)


# பெறுகை அறிவித்தல்
# நகராட்சி மன்றம், சாவகச்சேரி

தலைவர் பெறுகைக் குழு நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்களினால் 01.01.2024ஆம் திகதி தொடக்கம் 31.12.2024 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் கீழ்வரும் சேவைகளை வழங்குவதற்கு தகமையுள்ள சேவை வழங்குநரிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | ஆளணி எண்ணிக்கை | பெறுகை பிணை வைப்பு(ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | தொகை | காலம் |
| NP/14/41(3)1/OS/01/SES/2024 | பாதுகாப்புச் சேவை | 09 | 73,000.00 | 19.03.2024 |
| NP/14/41(3)1/OS/02/CLS/2024 | சுத்திகரிப்புச் சேவை | 12 | 97,000.00 | 19.03.2024 |
| NP/14/41(3)1/OS/03/DRS/2024 | சாரதி சேவை | 02 | 17,000.00 | 19.02.2024 |
| NP/14/41(3)1/OS/04/FLS/2024 | வெளிக்களத் தொழிலாளர் சேவை | 03 | 25,000.00 | 06.03.2024 |

1. இக்கேள்வி தேசிய போட்டிக் கேள்விகோரல் நடைமுறைக்கமைவாகவே கோரப்படுகின்றது.
2. தனியார் சேவை வழங்குநர்கள் சேவை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 02 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
3. சேவை வழங்குநர்களின் தலைமைக்காரியாலயம் அல்லது கிளைக்காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு, நகராட்சிமன்றம் சாவகச்சேரியின் தொலைபேசி இலக்கம் 021 227 0041 தொலைநகல் 021 227 0079 மின்னஞ்சல் chavauc@gmail.com இன் மூலம் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
5. சேவை வழங்குநர்கள் நகராட்சிமன்ற அலுவலகத்தில் அலுவலக நாட்களில் **22.11.2023 தொடக்கம் 05.12.2023 ஆம் திகதி பி.ப 03.00 மணிவரை** மீளளிக்கப்படாத பெறுகைப் gbt f ƒ l | z k hf **ரூபா 2,000.00 (VAT,NBT நீங்கலாக)** இனைச் செலுத்தி பெறுகை விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.
6. கேள்வி ஆவணங்கள் **06.12.2023 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு** முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **தலைவர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். குறித்த நேரத்திற்குப் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்.
8. பெறுகைப்பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் **இடதுபக்க மேல்மூலையில் பெறுகை இலக்கம்** எழுதப்படல் வேண்டும்.
9. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள்பெறுகைக் கோரலை கோருவதற்கும் பெறுகைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது.
10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் **27.11.2023 ஆம் திகதி பி.ப 3.00மணிக்கு** சாவகச்சேரி நகராட்சிமன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**நகராட்சிமன்றம்,**
**சாவகச்சேரி.**

(சி -7689)



# யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
# கொக்குவில்
## தரம்-6 அனுமதி -2024
## (தமிழ்/ஆங்கில மொழிமூலம்)

2024 ஆம் ஆண்டு தரம் 6 இல் கல்வி கற்பதற்காக புலமைப் பரிசில் பரீட்சையில் 130 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

பிற்பகல் 1.00 மணியில் இருந்து 3.00 மணிவரை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.


**முடிவுத் திகதி: 08.12.2023** (சி-7690) **அதிபர்.**


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 500 | 600 |
| தக்காளி | 400 | 350 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 100 | 150 | 150 |
| கோவா | 350 | 300 | 320 | 400 |
| கரட் | 350 | 400 | 380 | 500 |
| பூசணி | 120 | 100 | 100 | 100 |
| புடோல் | 250 | 250 | 200 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 450. | 500 |
| பெரிய வெங்காயம் | 300 | 220 | 200 | 300 |
| பாகற்காய் | 450 | 500 | 500 | 500 |
| வெண்டிக்காய் | 250 | 250 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 130 | 100 | 140 | 200 |
| பயற்றங்காய் | 600 | 500 | 450 | 500 |
| லீக்ஸ் | 230 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 180 | 200 | 200 | 400 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 600 | 700 | 450 | 600 |
| போஞ்சி | 500 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 300 | 320 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 150 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1200 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 90 | 70-100 |
| இராசவள்ளி | 400 | 400 | 500 | 500 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 120 | 180 | — | 300 |
| பொன்னாங்காணி | 40 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 35 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 200 | — | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுரங்கப் பாதையில் சிக்கியவர்களுக்கு குழாய் வழியாக சமைத்த உணவு



(டில்லி)

இந்தியாவில் இமயமலை வட்டாரத்தில் இடிந்து விழுந்த சுரங்கப் பாதையில் சிக்கியிருப்பவர்களுக்குச் சமைத்த உணவை அனுப்பவும் தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் மீட்புப் பணியாளர்கள் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

உத்தரகாண்ட் மாநிலத்தில் நெடுஞ்சாலைச் சுரங்கப் பாதையின் ஒரு பகுதி இம்மாதம் 12 ஆம் திகதி இடிந்துவிழுந்தது.


அதில் 41 பேர் சிக்கியிருந்தனர். மீட்புப்படையினர் புதிய முயற்சிகளை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சுரங்கப் பாதையில் சிக்கியிருப்போருக்கு உலர்ந்த உணவுப்பொருட்கள், தண்ணீர், மருந்துப்பொருட்கள் போன்றவை குழாய் வழி அனுப்பப்படுகின்றன. அவர்களுக்கு ஒளியும் பிராணவாயும் கிடைக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது.

சமைத்த உணவை அனுப்புவதற்கான பெரிய குழாய் விரைவில் தயாராகிவிடும் என்று கூறப்பட்டது.

மேலும் சுரங்கத்தில் இருப்போர் குடும்பத்தாருடன் தொடர்புகொள்ள கேமரா அல்லது தொலைபேசி இணைப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் அதிகாரிகள் எண்ணுகின்றனர்.(நி-5-6)

# 2.1 மில்லியனுக்கு ஏலம்போன நெப்போலியனின் தொப்பி



(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டின் முன்னாள் பேரரசர் நெப்போலியன் போனபார்ட்டின் தொப்பி 2.1 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு பாரிஸில் ஏலம் விடப்பட்டுள்ளது.

நெப்போலியன் தொப்பி 1769 முதல் 1821 வரை பேரரசர் நெப்போலியன் அணிந்திருந்தார்.

பிரெஞ்சுக் கொடியின் நீலம்-வெள்ளை -சிவப்பு வண்ணங்களைக் கொண்ட தொப்பி கறுப்பு வர் ணத்தை கொண்டதாகும்.

உலகெங்கிலும் உள்ள கலைப்பொருட்கள் சேகரிப்பாளர்களின் ஆர்வத்தை நெப்போலியன் தொப்பி ஈர்த்துள்ளது என்று ஏலதாரர் ஜீன்-பியர் கூறியுள்ளார்.

இந்தத் தொப்பி 655000-873000 அமெரிக்க டொலர்களுக்கு ஏலம் போகும் என மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதனை விட இரண்டு மடங்கிற்கும் அதிகமான தொகைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நெப்போலியன் 15 ஆண்டுகளில் சுமார் 120 தொப்பிகளை வைத்திருந்ததாகவும், அவற்றில் பெரும்பாலானவை இப்போது தொலைந்துவிட்டதாகவும் ஏலதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தத்தொப்பி நெப்போலியன் போனபார்ட்டின் உருவத்தை பிரதிபலிப்பதாகவும், தொப்பியின் கடைசி உரிமையாளரான தொழிலதிபர் ஜீன்-லூயிஸ் நொய்சிஸ் ஒரு வருடத்திற்கு முன்பு இறந்ததாகவும் பியர் தெரிவித்தார். (நி-5-6)

# தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்ததில் 10 பேர் உயிரிழப்பு



தென்அமெரிக்க நாடுகளில் ஒன்றான சுரினேம் நாட்டில் சட்டவிரோதமாக தோண்டப்பட்ட தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்ததில் 10 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சுரங்க சுரினேமின் தெற்கு மாகாணத்தில் உள்ள கிராமப்புற பகுதியில் அமைந்துள்ளது.

தங்கம் எடுப்பதற்காக அங்குள்ள சிலரால் தோண்டப்பட்டதாக நம்பப்படுகிறது.


சுரங்கம் இடிந்து விழுந்த தற்கான காரணம் வெளிவரவில்லை.

சுரினேம் நாட்டில் தங்க சுரங்கம் அமைக்க அமெரிக்கா மற்றும் கனடா நாட்டின் நிறுவனங்கள் மிகப்பெரிய அளவில் முதலீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# உக்ரைன், கா...
# சேர்ந்த வ...
## பதற்றத்தில்...

(சியோல்)

தென்கொரியாவின் எச்சரிக்கையை மீறி... கைக்கோளை ஏவ வடகொரியா தயாராவ... தீபகற்பத்தில் மீண்டும் பதற்றம் சூழ்ந்துள்... உக்ரைன், காசா வரிசையில் உலக நாடுகள... கொரியாவும் சேர்ந்திருக்கிறது. இந்நிலைய... தனது உளவு செயற்கைக்கோளை ஏவுவதற்கா... உடனடியாக நிறுத்த வேண்டும் என்று தெ... ணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



# வரிகளை குறைப்பதாக பிரதமர் ரிஷி சுனக் உறுதி




(லண்டன்)

லண்டனில் இந்த ஆண்டு இறுதிக்குள் பணவீக்கத்தை பாதியாகக் குறைக்க அரசாங்கம் உறுதியளித்துள்ள நிலையில் வரிகளைக் குறைப்பதாக பிரதமர் ரிஷி சுனக் உறுதியளித்துள்ளார்.

அடுத்த தேர்தலுக்கு முன்னதாக, தற்போது 70 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு ஏற்பட்டுள்ள வரிச்சுமையைக் குறைக்குமாறு கட்சியில் உள்ள பலர் அழுத்தம் பிரயோகித்து வருகின்றனர்.

இந்நிலையில் வடக்கு லண்டனில் தனது பொருளாதாரத் திட்டங்கள் குறித்து உரை நிகழ்த்திய சுனக், பணவீக்கம் மற்றும் கடனைக் கட்டுப்படுத்தினால் மட்டுமே வரிகளைக் குறைக்க முடியும் என கூறியுள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# , காசா வரிசையில்
# வடகொரியா
## தில் உலக நாடுகள்

யை மீறி, உளவு செயற்
தயாராவதால், கொரிய
சூழ்ந்துள்ளது. இதனால்
நாடுகளின் கவலையில்
ந்நிலையில் வடகொரியா
வுவதற்கான ஏற்பாடுகளை
ன்று தென்கொரிய இரா






இவ்வாண்டு மட்டும் இதுவரை 2 முறை உளவு செயற்கைக்கோளினை ஏவும் முயற்சியில் வடகொரியா தோல்வி கண்டிருக்கிறது. எனினும் 3 ஆவது முறையாக அடுத்த உளவு செயற்கைக்கோளினை ஏவும் முயற்சியில் தீவிரமாக உள்ளது.

தங்களது உளவுத் தகவல்களின் அடிப்படையில், இந்த வாரத்தில் வட கொரியா தனது உளவு செயற்கைக் கோளை ஏவ இருப்பதாக தென் கொரிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஷின் வோன் சிக் தெரிவித்தார்.

இது தொடர்பாக, இராணுவ உளவு செயற்கைக்கோளை ஏவுவதற்கான தயாரிப்புகளை உடனடியாக நிறுத்துமாறு வடகொரியாவை நாங்கள் கடுமையாக எச்சரிக்கிறோம்.

எச்சரிக்கையை மீறி இராணுவ உளவு செயற்கைக் கோளை ஏவ வடகொரியா முயற்சித்தால் எங்கள் நாட்டு மக்களின் உயிருக்கும், பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிக்கத் தேவையான நடவடிக்கைகளை எங்கள் இராணுவம் மேற்கொள்ளும் என்று தென் கொரிய இராணுவத்தின் தலைமை இயக்குநரான காங் ஹோ-பில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் மற்றும் அதன் நட்பு நாடுகளின் எச்சரிக்கையை புறக்கணித்து, வட கொரியா இந்த ஆண்டின் தொடக்கம் முதலே அதிக ஆயுத சோதனைகளை நடத்தி வருகிறது. தென்கொரியா மீதும், அவசியமெனில் அமெரிக்கா மீதும், தாக்குதல் தொடுக்க வட கொரியா தயாராகி வருகிறது. தனது இராணுவ நடவடிக்கைகளுக்கு உதவும் நோக்கிலும், எதிரிகளின் நகர்வுகளை ஒற்றறியவும் உளவு செயற்கைக் கோளை வடகொரியா ஏவத் தயாராகிறது. (நி-5-6)

க
தி




யைக்
ள்ள
கித்து
ண்ட
ட்டங்
த்திய
ம் கட
டுமே
ன
-5-6)

## காசாவிலுள்ள இந்தோனேசிய மருத்துவமனை மீது தாக்குதல்
### 12 பேர் உயிரிழப்பு



(காசா)

வடக்கு காசாவில் உள்ள இந்தோனேசிய மருத்துவமனை மீது இஸ்ரேலிய படையினர் நடத்திய ஷெல் தாக்குதலில் சுமார் 12 பேர் கொல்லப்பட்டதோடு பலர் காயமடைந்துள்ளனர் என்று பாலஸ்தீனிய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சுகாதார அமைச்சு வெளியிட்ட ஒரு அறிக்கையில்,

ஆயிரக்கணக்கான நோயாளிகள், மருத்துவ பணியாளர்கள் "இந்தோனேசிய மருத்துவமனையின் நேரடி மற்றும் தொடர்ச்சியான குண்டுவெடிப்பின் விளைவாக மரண அபாயத்தில் உள்ளன" என்று தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ பாலஸ்தீனிய செய்தி நிறுவனத்தின் தகவல்படி, இந்த மருத்துவமனைக்குள் 150 நோயாளிகள், 100 மருத்துவ ஊழியர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான இடம் பெயர்ந்த மக்கள் உள்ளனர் என தெரிவித்துள்ளது.

ஏற்கனவே அல் ஷிபா மருத்துவமனையை விட்டு அனைவரையும் கட்டாயப்படுத்தி வெளியேற்றிய இஸ்ரேல் இராணுவம் தற்போது மற்றுமொரு மருத்துவமனை மீது தாக்குதல் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## ஹமாஸ் கிளர்ச்சிக் குழுவினருக்கு மரணதண்டனை விதிக்க வேண்டும்
### குடும்பத்தினர் கோரிக்கை




(ஜெருசலேம்)

தடுத்து வைக்கப்பட்டுள்ள ஹமாஸ் கிளர்ச்சிக் குழுவினருக்கு மரணதண்டனை விதிக்கும் யோசனையைக் கைவிட வேண்டும் என ஹமாஸ் பிடியில் உள்ள பணயக் கைதிகளின் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இஸ்ரேலின் வலதுசாரி பாராளுமன்ற உறுப்பினர்கள், ஹமாஸ் கிளர்ச்சிக் குழுவினருக்கு மரண தண்டனை விதிக்கும் யோசனையை பரிந்துரைத்துள்ளனர்.

இந்நிலையில் ஹமாஸ் கிளர்ச்சிக் குழுவினருக்கு மரணதண்டனை விதிப்பது குறித்து பொது விவாதத்தால் பணயக் கைதிகளை விடுவிக்கும் முயற்சிகள் ஆபத்தில் முடியலாம் என்று அவர்களின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவும் அவருடைய போர்க்கால அமைச்சரவையும் உரிய பதிலளிக்க வேண்டும் என்றும் சிலர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

பணயக்கைதிகளை மீட்கும் நடவடிக்கையில் அரசாங்கம் வெளிப்படையாக நடந்து கொள்ளவில்லை என்றும் பணயக் கைதிகளின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

## ஒற்றுமையை வெளிக்காட்டிய இஸ்ரேலியப் பெண்கள்



(டெல் அவிவ்)

இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையேயான போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், அவர்களுடன் ஒற்றுமையாக இருப்பதை வெளிக்காட்டும் பொருட்டு இஸ்ரேலிய பெண்கள் மிகப்பெரிய யோகா நிகழ்ச்சியை நடத்தியுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி முதல் பாலஸ்தீனத்தின் ஹமாஸ் குழு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்திய போது இஸ்ரேலிய மக்கள் பலரை பணய கைதிகளாக பிடித்துச் சென்றனர்.

இந்த நிலையில், பணயக் கைதிகளாக சிறைபிடிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவை தெரிவிக்கவும் உயிரிழந்த அப்பாவிகளின் குடும்பங்களுக்கு அஞ்சலி செலுத்தவும், இஸ்ரேலிய பெண்கள் டெல் அவிவ் கடற்கரையோரத்தில் மிகப்பெரிய யோகா நிகழ்ச்சியை நடத்தியுள்ளனர். ஒற்றுமையின் சக்திவாய்ந்த காட்சியாக அமைந்த இந்த நிகழ்ச்சியில், ஏராளமான சிறுமிகள், பெண்கள் கலந்து கொண்டனர்.

பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் புகைப்படங்களை தங்களுடன் வைத்துக் கொண்டு அவர்கள் யோகா செய்துள்ளனர்.

மேலும், வோஷிங்டன் போஸ்ட்டின் தகவலின்படி, பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு ஈடாக ஐந்து நாள் தற்காலிக போர் நிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தைகளில் சம்பந்தப்பட்ட தரப்பினர் ஈடுபட்டுள்ளனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தரிப்பதால் விருட்சங்களையும் பாதுகாத்து உயிரிழப்பையும் தவிர்த்திடலாம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

மழைக் காலம் ஆரம்பித்து விட்டது. மண் முழுவதுமாக நனைந்திருக்கின்றது. ஓரளவு உயர்மான மரங்கள் தலை சரிந்து தக்கெனப் பிழைக்கின்றன. விசாலமாக விரிந்திருக்கின்ற மரங்களின் இலைப்பரப்பு மழையில் நனைந்து பாரம் அதிகரிக்க அப்படியே தலைசாய்த்து விட்டிருக்கின்றன. வாழ்வாங்கு வாழ்ந்து எமக்கு வழிகாட்டியாக இருந்த மரங்களின் தண்டினுள் புழுக்குடைந்து கோறையாயிருக்கின்ற மரங்கள் இப்போதோ நாளைக்கோ என தமது ஆயுட்காலத்தை அகட்டி வைத்திருக்கின்றன.

கவனிப்பற்றிருக்கும் பல தலவிருட்சங்கள் சாலையோரம் அழகாகவும் நிழலும் தந்து அவற்றினை பலவகை மிருகங்கள் பறவைகள் தங்கிச்செல்லும் வாழும் இடங்களாகவே மாறியிருக்கின்றன. சாலை அகலிப்பில் நீடூழி உயர்ந்திருந்த மரங்கள் அனைத்தும் வெட்டிச்சரிக்கப்பட்டதால் நிழலுக்கு என ஒதுங்க கூட முடியாது வெய்யில் காலத்தில் பலர் தவித்தது போக தம்முள் திட்டித் தீர்த்ததும் உண்டு. நின்ற மரத்தை வெட்டிவிட்டு செயற்கையான கூடாரமமைத்து அதனை உறவுகளின்பேரில் அஞ்சலி செய்திருக்கும் காட்சியும் ஆங்காங்கே காணக் கிடைக்கின்றது.

மேற்கூறியவை தின நடப்புகளாக பலவிடங்களில் இருந்தாலும் அண்மைக்காலத்தில் மழை கூடி சாலையோரம் ஓங்கி வளர்ந்திருந்த மரங்கள் அடிப்பகுதி நொய்ந்து போனதால் சரிந்துமக்களில் பலரது உயிரைக்காவுகொண்ட செய்திகள்காட்சிகள் மனதை நெருடிக்கொண்டிருக்கின்றது. மறுபக்கத்தில் மர வளர்ப்பில் பலநிறுவனங்களும் தனியாரும் போட்டி போட்டுக் கொண்டு மரங்களை நடுகை செய்வதும் அவற்றை கூடமைத்து பாதுகாப்பதும் காணக்கிடைக்கும் அரியகாட்சிகளாகும்.

இருப்பினும் சாலைகளனைத்தும் பிரதேசசபைகளுக்கோ, மாநகரசபைகளுக்கோ அன்றிசாலைகளை பேணிப்பாதுகாக்கும் நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கோ உரித்தானதாகவும் அவர்களின் உத்தரவின்றி எந்த மரங்களையும் வெட்டி அகற்ற முடியாதென்ற சட்டங்களும் இருந்தும் இவ்வாறான அவதியில் சரியும் நிலையிலுள்ள மரங்களை அவதானித்து அவற்றை மனிதனுக்கு உயிரிழப்பு ஏற்படாதவாறு பேணிப் பாதுகாக்க முடியாதிருக்கின்றதுஎன்பதனை என்னவென்பது. இவை தவிர மின்சார திணைக்களம் மற்றும் தொலைபேசி நிறுவனங்களும் அவசியம் இடர் தரும் மரங்களை இக்கால கட்டத்தில் வெட்டி ஒதுக்கும் காட்சிகளையும் காணலாம். ஆக மொத்தத்தில் மரங்களின் இலைப்பரப்பை ஆங்காங்கே குறைத்து அதிலிருந்து வெட்டிய கிளைகளை விறகுக்கும் மேலும் மரத்தை எவ்வகையிலும் சரியாமல் எவருக்கும் இடர் தராது பேணிப்பாதுகாத்தல் வேண்டும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



ஒரு மரத்தை நடுகை செய்து அதனை வளர்த்து ஆளாக்குவதென்பது பெரிய கைங்கரியம். தனிமனித மற்றும் மக்களை ஒன்று கூட்டிமக்களியக்கமாக முனைப்புக் காட்டிய மறைந்த முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்களும் சமூகத்தை நேசித்த சின்ன கலைவாணர்விவேக்போன்றவர்களும் நம் தேசத்து மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்களும் இன்னும் பசுமை இயக்கங்கள், சங்கங்கள், திணைக்களங்கள் அனைத்தும் மரநடுகையுடன் முன்னின்றுழைக்கும் முயற்சிகள் பாராட்டுக்குரியவை. நடுவதுடன் நின்றுவிடாது அவற்றை முறையாக பராமரித்து வளர்த்து இச் சமூகத்திற்கு அர்ப்பணிக்கும் சேவையை பெரிதும் கௌரவிக்கலாம். பசுமையாக எமது தேசத்தை .பிரசேதத்தை இன்னும் எமது வாழ்விடத்தை மாற்றியமைக்கும் முயற்சி முழு மனித மேம்பாட்டுக்கான கைங்கரியம் ஆகும்.

இவ்வாறு நடுகை செய்யப்படும் மரங்களை அவை பாட்டுக்கு வளரவிடாது சீவிச் சிங்காரித்து அழகுள்ளவையாக தனித்த சூழல் தொகுதியாக மனித நடவடிக்கைகள் அனைத்திற்கும் இடர்களை ஏற்படாத வகையில் பேணிப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். வெளிநாடுகளில் இதற்கென தனியனானஒரு இலாகா இருப்பதனை அறிய முடிகின்றது. சாலையோரங்களில் ஓங்கி வளர்ந்திருக்கும் மரங்களை கண்டபடி வெட்டி தகர்த் தெறியாது அவற்றின் அவசியத்தைப் புரிந்து சாலையில் செல்லும் வாகனங்களுக்கும் இன்னும் பாதையிலும் பாதையோரத்திலும் நடந்து செல்வோரை பாதிக்காத வகையில் மரங்களை ஒதுக்கி அவற்றின் வாழ்தகவை அதிகரிக்கலாம்.

சாலையோரத்து மரங்களான புளி, மா, விளாத்தி, இலவு என்பன ஓங்கி வளர்ந்திருந்தாலும் மரத்தின் வயதையும் அவற்றின் இலைப் பரப்பின் தன்மையையும் கணக்கில்கொண்டுஅவற்றை தேவை கருதி சுருக்கி மரத்தை அதே உயிர்ப்புடன் வாழவழி செய்யலாம். இதற்கென கத்தரிப்பவரை தூக்கி உயர்த்தும் இயந்திரங்களின் உதவியை பெற முடிந்தால் இவ்வாறான மரங்களின் வாழ்தகவினை அதிகரிப்பதுடன் மரங்களை அழகானதாக வடிவமைத்தும் கொள்ளலாம். மழைக்காலம் முடிந்தபின் மீண்டும் இவ்வாறான மரங்கள் கிளை பரப்பி ஓங்கி வளர்ந்திருப்பதும் அவற்றிலிருந்து பயன்பாட்டை பெறுவ தனையும் காணலாம். இவ்வாறான செயற்பாடுகளை தொடர்ச்சியாக செய்யும் போது மரங்களில் உள்ள பிரச்சினைகளையும் செவிமடுக்கும் நிலைவரும். எந்த மரமும் பிரச்சினையாக மாறும் நிலையில் அவற்றை அகற்றவோ அல்லது பிரச்சினைகளை தீர்த்து மீண்டும் அதிலிருந்து பயன்பெற முடியும் என்பதனையும் அவதானிக்கலாம்.

வடபகுதியில் நிஷாப் புயல் மழை 2008 இல் வந்த போது அங்கிருந்த ஓங்கி வளர்ந்திருந்த அனைத்து மரங்களும் புய லின் வேகத்திற்கு தாக்குப்பிடிக்காமல் சரிந்து போய் வேறு வழியின்றி அவற்றை தறித்து அகற்ற வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் எம்மவர்கள் வந்திருந்தனர். வெட்டியகற்றிய பின் அந்த இடங்களில் மரங்கள் வைக்கப்பட்டாலும் அவை வளர்ந்து வர நீண்ட காலங்கள் ஆவதனால் அவ்விடங்கள் வெறுமையாகி மக்கள் அவசரத்திற்கு ஒதுங்குவதற்குக் கூட இடமில்லாது அவதிப்பட்ட காலங்கள் உண்டு.

இவை தவிர மரங்கள் அதிகம் காணப்படும் பூமி இயற்கை வளங் கொண்ட பூமி. இயற்கையுடன் நாம் இணைந்து வாழத்தலைப்படும் போது இவ்வாறான பிரச்சினைக்கு எளிதாக தீர்வினைக் கண்டு கொண்டால் நாம் வாழும் தேசம் பசுமையுடன் பல்வகைத் தன்மையையும் பெற்று விடும்.

மரநடுகையினை ஊக்குவிக்கும் அதேநேரத்தில் இவ்வாறான விருட்சங்களை தேவைக்கேற்ப கத்தரித்து அவற்றின் வாழ்தகவை அதிகரிக்கும் செயற்பாடுகளை உரியவர்கள் மேற்கொள்ளல் அவசியமானதாகும். இல்லாதுவிடின் இதற்கென ஒரு செயலணியை உருவாக்கி மரங்களை கண்டறிந்து தேவையற்ற பாகங்களை அகற்றிக் கொள்ளலாம். முன்னைய காலங்களில் கோடரி கொண்டு பல்வேறு எத்தனங்களுக்கு மத்தியில் தான் மரங்கள் வெட்டியகற்றப்பட்டன. மாறாக தற்போது இயந்திர செயின் பூட்டியஅரிவாள் இலகுவில் சிலநொடிகளில் இவ்வாறான வேலைகளை எளிதாக்கியிருக்கின்றதென்றாலும் இவற்றினால் அகற்றப்படும் மரங்கள் பாவ புண்ணியம் என எதுவும் பார்க்காது காரியத்தை இலகுவில் முடித்து விடுகின்றனர்.

ஓர் பல்பயன்தரும் மரத்தை நட்டு வளர்ப்பதென்பது இலகுவான காரியமல்ல. இந்த வகையில் முன்னாள் மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் அவர்களின் தேசிய பசுமை இயக்கத்தின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை பாராட்டுவதுடன் மரநடுகை காலத்தில் அதற்கான மதிப்பையும்கொடுத்து மரநடுகையின் அவசியத்தையும் அவற்றின் பயன்பாடுகளையும் எடுத்துச் சொல்லும் பலநிகழ்வுகளை மக்கள் மயப்படுத்தி மரங்களை பாதுகாக்கவும் பேணி வளர்க்கவும் இன்னும் வேண்டிய ஊக்கத்தை கொடுப்பதும் சிறப்புக்குரியதாகும். மரங்களை தேவை கருதி பொது இடங்கள் மற்றும் பயன்பாடற்ற நிலங்களிலும் மற்றும் சாலையோர இடங்களில் நடுவதனை தொடர்ந்தும் ஊக்கப்படுத்தும் அதே வேளையில் அவற்றின் வளர்ச்சியை அவதானித்து தேவையான போது கத்தரித்து சரிந்து விழாது பாதுகாக்கவும் வேண்டும். இங்கு பொதுவாக எழுந்துள்ள கேள்வியென்னவென்றால் மரநடுகையை பல நிறுவனங்கள் ஊக்கப்படுத்தும் நிலையில் அவசியம் கருதி கத்தரித்து மரத்தினால் விபரீதம் ஏற்படாமலிருக்கும் செயற்பாட்டை செய்வது யார் என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளியில் ஆபத்தான மரங்களை அகற்றும் பணி முன்னெடுப்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் A9 வீதியில் உள்ள ஆபத்தான 46 மரங்கள் முழுமையாக அகற்றும் பணி நேற்று ஆம்ப மானது.

குறித்த வீதியில் ஆபத்தான தாக 57 மரங்கள் அடையாளம் காணப்பட்டன. அதில் 46 மரங் களை முழுமையாக அகற்றவும் 11 மரங்களின் ஆபத்தான கிளை களை அகற்றவும் அனுமதி கோரப்பட்டது.

இந்த நிலையில், அனுமதி கிடைக்கப்பெற்றதை அடுத்து குறித்த நடவடிக்கை ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

குறித்த மரங்களில் அதிகமான பாலை மரங்கள் உள்ளதுடன், ஆபத்தான நிலையிலும் காணப்படுகி ன்றன.

இதேவேளை, கிளிநொச்சி மகாவித்தியாலயம் முன்பாக வும் அவ்வீதியிலும் காணப் படும் ஆபத்தான மரங்கள் மற்றும் கிளைகளை அகற்றும் பணிகளும் அடுத்த வாரமள வில் ஆரம்பிக்கப்படும் என அரசாங்க மரக் கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்துள்ள னர். (நி-5-6-100)

# 72 ஆவது வயதிலும் 2 தங்கப் பதக்கங்கள்



(மணிலா)

பிலிப்பைன்ஸில் நடை பெற்ற நேஷனல் மாஸ்டர்ஸ் என்ட் சீனியர் அத்லடிக்ஸ் போட் டியில் முல்லைத்தீவை சேர்ந்த வீராங்கனை இரண்டு தங்கப் பதக்கங்களை தனதாக்கியு ள்ளார்.

இலங்கையிலிருந்து கல ந்து கொண்ட முல்லைத்தீவு - முள்ளியவளையைச்சேர்ந்த 72 வயதான அகிலத்திருநாயகி என்ற வீராங்கனையே இந்த சாதனையை படைத்துள் ளார்.

1500 மீற்றர் ஓட்டப்போட்டி மற்றும் 5000 மீற்றர் விரைவு நடை ஆகிய போட்டிகளில் 2 தங்கப் பதக்கங்களை பெற்று ள்ளதுடன் 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக் கத்தையும் தனதாக்கியுள் ளார். (நி-5-6)

# வவுனியா பகுதியில் 7 கடைகளில் திருட்டு

(வவுனியா)

வவுனியா, வன்னிப் பிராந் திய பிரதிப்பொலிஸ்மா அதிபர் காரியாலத்திற்கு முன்பாக அமைந்துள்ள 7 வியாபார நிலையங்களில் கொள்ளை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இத்தொடர் திருட்டுச் சம்பவ ங்கள் இடம்பெற்றிருக்கலாம் எனவும் சுமார் 50, 000 ரூபாய் வரையிலான பணம் திருடப்பட்டுள்ளதாகவும் வவு னியாப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இந்நிலையில் கண்காணி ப்பு கமராக்களின் உதவியுடன் வவுனியா பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகி ன்றனர். (நி-5-6)

# கருவிகளுக்கு முத்திரையிடும் வேலைத்திட்டப் பணி ஆரம்பம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நிறுவை அளவு கருவிகளுக்கு முத்திரை பதிக்கும் வேலைத் திட்டம் நேற்று செவ்வாய்க் கிழமை முன்னெடுக்கப்பட் டது.

நேற்று ஸ்கந்தபுர நூலகக் கட்டடத்தில் இடம்பெற்ற நிலை யில் இன்று வட்டக்கச்சி சிவிக் சென்ரர் கிராம சேவையாளர் பிரிவிலும் நாளை மற்றும் நாளை மறுதினம் மாவட்ட செயலகம் வளாகம் 2 இல் அமைந்துள்ள அளவீட்டு அல குகள் திணைக்களத்திலும் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை நடை பெறவுள்ளது.

இதன்போது, 12 மாதகாலப் பகுதியில் முத்திரையிடப்படாத அளவீட்டு கருவிகளுக்கு முத் திரையிடப்படவுள்ளதுடன் வர் த்தக நிலையங்களில் முத் திரை இடப்படாத தராசுகள் பாவனைக்கு முற்றாக தடை செய்யப்பட்டுள்ள நிலையில், வருடாந்தம் இந்த முத்திரை யிடும் பணிகளை அளவீட்டு அலகுகள் திணைக்களம் மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-315)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2972

**அஸ்மிதன்**




**ஹரிசாய்**




**நிவேதா**




**சாதனா**




**தரணிகரன்**




**பரத்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 335





"ஒருவர் எனக்கு செய்த நன்மையையும், நான் மறக்க மாட்டேன் இன்னொருவர் எனக்குச் செய்த தீமையையும் மறக்க மாட்டேன். இன்னமும் இந்த என் சுபாவம் தங்களுக்குத் தெரியவில்லையா?" என்றாள் நந்தினி.

"அப்படியானால் அவள் இங்கு எதற்காக வருகிறாள்?"

"அவள் இஷ்டம், வருகிறாள்! சக்கரவர்த்தியின் குமாரி என்ற இறுமாப்பினால் வருகிறாள்!"

"நீ எதற்காக அழைத்தாயாம்?"

"நான் அழைக்கவில்லை அவளே அழைத்துக் கொண்டாள். 'சம்புவரையர் மகன் உங்கள் வீட்டில் இருக்கிறானாமே? அவனைப் பார்க்க வேண்டும்!' என்றாள், 'நீ வராதே!' என்று நான் சொல்ல முடியுமா? அப்படிச் சொல்லக் கூடிய காலம் வரும். அதுவரையில் எல்லா அவமானங்களையும் நான் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்."

"என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. அவள் வரும் சமயம் நான் இந்த அரண்மனையில் இருக்க முடியாது. இந்த நகரிலேயே என்னால் இருக்க முடியாது. மழபாடியில் கொஞ்சம் அலுவல் இருக்கிறது. போய் வருகிறேன்."

"அப்படியே செய்யுங்கள், நாதா! நானே சொல்லலாம் என்று இருந்தேன். அந்த விஷப்பாம்பை என்னிடமே விட்டு விடுங்கள். அவளுடைய விஷத்தை இறக்குவது எப்படி என்று எனக்குத் தெரியும். தாங்கள் திரும்பி வரும் போது ஏதேனும் சில அதிசயமான செய்திகளைக் கேள்விப்பட்டால் அதற்காகத் தாங்கள் வியப்படைய வேண்டாம்."

"என்ன மாதிரி அதிசயமான செய்திகள்?"

"குந்தவைப் பிராட்டி கந்தன் மாறனைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவோ, ஆதிக்க கரிகாலன் கந்தன்மாறனுடைய தங்கையை மணக்கப் போவதாகவோ கேள்விப்படலாம்."

"ஐயையோ! இது என்ன சொல்கிறாய்? அப்படியெல்லாம் நடந்து விட்டால் நம்முடைய யோசனைகள் என்ன ஆகும்?"

"பேச்சு நடந்தால், காரியமே நடந்துவிடுமா, என்ன? மதுராந்தகத் தேவருக்கு அடுத்த பட்டம் என்று உங்கள் நண்பர்களிடமெல்லாம் சொல்லி வருகிறீர்களே? உண்மையில் அப்படி நடக்கப் போகிறதா? பெண்ணைப்போல் நாணிக் கோணி நடக்கும் மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டுவதற்காகவா நாம் இவ்வளவு பாடுபடுகிறோம்?" என்று கூறி நந்தினி தன் கரிய கண்களினால் பெரிய பழுவேட்டரையரை உற்று நோக்கினாள். அந்தப் பார்வையின் சக்தியைத் தாங்க முடியாத அக்கிழவர் தலை குனிந்து அவளுடைய கரத்தை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, "என் கண்ணே! இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் நீ சக்கரவர்த்தினியாக வீற்றிருக்கும் நாள் சீக்கிரத்திலேயே வரும்!" என்றார்.

கந்தன்மாறன் தன்னைப் பார்க்கக் குந்தவை தேவி வரப்போகிறாள் என்று அறிந்தது முதல் பரபரப்பு அடைந்து தத்தளித்துக் கொண்டிருந்தான். குந்தவையின் அறிவும், அழகும் மற்ற உயர்வுகளும் நாடு அறிந்தவை அல்லவா? அப்படிப்பட்ட இளைய பிராட்டி தன்னைப் பார்ப்பதற்காக வருகிறாள் என்பது எவ்வளவு பெருமையான விடயம்? இதற்காக உடம்பில் இன்னும் பல குத்துக்கள் பட்டு நோயாகவும் படுத்திருக்கலாமே? அடடா! இந்த மாதிரி காயம் போர்க்களத்தில் தன்னுடைய மார்பிலே பட்டுத்தான் படுத்திருக்கக் கூடாதா? அச்சமயம் குந்தவை தேவி வந்து தன்னைப் பார்த்தால் எவ்வளவு கௌரவமாயிருக்கும்? அப்படியின்றி, இப்போது ஒரு சிநேகிதன் செய்த துரோகத்தைப் பற்றிப் பலரிடம் படித்த பாடத்தையேயல்லவா அவளிடமும் படித்தாக வேண்டும்?

இடையிடையே அந்தப் பெண்ணரசியின் குடும்பத்தினருக்கு விரோதமாக அவன் ஈடுபட்டிருக்கும் இரகசிய முயற்சியைக் குறித்து நினைவு வந்து கொஞ்சம் அவனை வருத்தியது. (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சிறிய தவறும் பெரிய தண்டனையும்

(நேற்றைய தொடர்ச்சி...)

சபையில் அமர்ந்திருந்த அக்பர் அலியைப் பார்த்து, "ஒரு பை சுண்ணாம்பு வாங்க இத்தனை நேரமா?" என்று கடிந்து கொண்ட பிறகு, ஒரு காவலனை நோக்கி "இவனை சபைக்கு வெளியே அழைத்துச் சென்று பையிலுள்ள சுண்ணாம்பு முழுவதையும் அவன் வாய்க்குள் போட்டு அடைத்து விடு!" என்றார். அப்போது தான் அக்பர் தனக்குத் தந்த தண்டனையின் கொடூரம் அலிக்குப் புரிந்தது.



கதறக் கதற அலியை வெளியே இழுத்துப் போன காவலன், அலியின் பையிலிருந்து சுண்ணாம்பை எடுத்து அலியின் வாயில் போட்டு விழுங்கச் செய்தான். ஒரு கவளம் சுண்ணாம்பு தின்ற உடனேயே, வாய், தொண்டை, வயிறு வெந்து போக அலி சுருண்டு விழுந்தான். தண்டனைக்குள்ளான அலி என்ன ஆனான் என்று பார்க்க அங்கு வந்த அக்பர், அலி தரையில் விழுந்திருந்தும் சுயநினைவுடன் இருப்பதைப் பார்த்து, "நீ இன்னும் சாகவில்லையா?" என்று கேட்டார்.

"இல்லை, பிரபு!" என்ற அலி சிரமப்பட்டு எழுந்து நின்று, "வயிறு நிறைய நெய் சாப்பிட்டதாலோ என்னவோ, நான் உயிருடன் இருக்கிறேன்!" என்றான். "உன்னை யார் நெய் [illegible]" என்று அக்பர் கேட்க, அலி மகேஷின் பெயரைக் கூறினான். உடனே மகேஷ் அங்கு அழைத்து வரப்பட்டான். அவனைப் பார்த்ததும், "பீர்பால்! உன் வேலை தானா இது? அவனை ஏன் நெய் சாப்பிடச் சொன்னாய்?" என்று அக்பர் கேட்டார்.

"பிரபு! அலியிடம் நடந்தைக் கேட்ட பிறகு நீங்கள் அவனை சுண்ணாம்பை விழுங்க வைக்கப் போகிறீர்கள் என்று தெரிந்து கொண்டேன். நெய் தின்ற பிறகு சுண்ணாம்பை விழுங்கினால் உடலுக்குத் தீங்கு ஏற்படாது என்று எனக்குத் தெரியும்! அதனால்தான் அவ்வாறு அவனை செய்யச் சொன்னேன்" என்றான் பீர்பல்.

"அவன் மீது உனக்கு என்ன அவ்வளவு அக்கறை?" என்று அக்பர் கேட்க, "அக்கறை அவன் மீதில்லை, உங்கள் மீதுதான் பிரபு. அவன் தயாரிக்கும் பீடாவை நீங்கள் மிகவும் விரும்புகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். ஏதோ தெரியாமல் அவன் ஒரு நாள் செய்த தவறுக்காக அத்தனை பெரிய தண்டனையை அவன் பெறப் போவதைத் தவிர்க்க விரும்பினேன். நீங்கள் அவன் செய்த சிறிய தவறை மன்னித்து விட வேண்டும். அக்பர் சக்கரவர்த்தி மிகவும் இரக்க குணம் படைத்தவர் என்பதை நிரூபிக்க இதை விட உங்களுக்கு வாய்ப்பு கிடைக்குமா?" என்று கேட்டான் பீர்பல்.

அவனுடைய சாமர்த்தியமான பேச்சினால் கவரப்பட்ட அக்பர், "நீ சொல்வது சரிதான் மூன்று ஆண்டுகளாக அருமையாக பீடா தயாரித்தவன் ஒருநாள் தெரியாமல் செய்த தவறுக்காக தண்டனை பெறுவது சரியல்ல. அவனை நான் மன்னித்து விடுகிறேன்" என்றவர் அலியைப் பார்த்து, "பிழைத்துப் போ" என்றார்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் கடந்த நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமன்.

~ இலத்தீன் சட்டப்பழமொழி

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## கைதியைக் கொன்ற பொலிஸாருக்கு இடமாற்றமா? தண்டனை

யாழ்ப்பாணம் சித்தங்கேணியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் (26) என்ற இளைஞரை சந்தேகத்தின் பேரில் கைது செய்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் அவரை அடித்து சித்திர வதை செய்து கொலை செய்துள்ளனர் என்ற செய்தி பலரையும் பதற வைத்துள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவரை இம்மை மறுமையின்றி சித்திர வதை செய்து அவரைக் கொல்லுமளவுக்கு வட்டுக்கோட்டைப் பொலிஸார் கொடியவர்களாக நடந்துள்ளனர் எனும்போது, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, அவருக்குகீழ் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எத்தகைய மனநிலை கொண்டவர்கள் என்பதைக் கணிப்பது கடினமான காரியமன்று.

அதுதவிர, வட்டுக்கோட்டைப் பொலிஸார் இவ்வாறானதொரு கொடுமையைச் செய்யுமளவுக்கு அவர்கள் நிதானமிழந்து இருந்துள்ளனரா? என்ற கேள்வியும் எழவே செய்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், மேற்படி சம்பவத்தில் தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தரும் சம்பந்தப்பட்டதான தகவல் அதிர்ச்சிக்குரியது.

பொதுவில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் சேவையில் நியமிக்கப்பட்ட பின்னர் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கைதிகள் சித்திரவதைக்கு உட்படுவது அதிகமாக உள்ளதென்ற விடயம் மக்கள் மத்தியில் பேசப்படுகிறது.

அதாவது சிங்களப் பொலிஸாரையும் விட தமிழ்ப் பொலிஸார் மிக மோசமாக நடந்து கொள்கின்றனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களைக் கடுமையாகச் சித்திரவதை செய்வதன் மூலம் தாங்கள் சிங்கள பொலிஸாருக்கு விசுவாசமாக நடந்து கொள்வதாகக் காட்டிக் கொள்வதும் இவர்களின் நோக்கமாக இருக்கிறது என்ற கருத்தும் மக்கள் மத்தியில் உண்டு.

அதிலும் வடபகுதியிலுள்ள பொலிஸ் நிலையங்களில் இடம்பெற்ற கைதிகளின் மரணங்களில் தமிழ்ப் பொலிஸார் சம்பந்தப்படாமல் இல்லை என்பதும் இங்கு சுட்டிக் காட்டுதற்குரியது.

எதுஎவ்வாறாயினும் வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் காவலில் இருந்த ஓர் இளைஞர் பொலிஸாரின் சித்திரவதையால் உயிரிழுந்தார் என்பது சாதாரணமான விடயமன்று.

அதேநேரம் இளைஞனின் மரணத்தையடுத்து பொலிஸார் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டதென்பது இலங்கைப் பொலிஸ் திணைக்களம் நியாயமற்ற ஓர் அமைப்பு என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

ஆம், கைதியின் கொலையுடன் சம்பந்தப்பட்ட பொலிஸாரை முதலில் பணி இடைநிறுத்தம் செய்வதுதான் நீதியான நடவடிக்கை.

ஆனால் இங்கோ இடமாற்றம் வழங்கப்படுகிறது என்றால் பொலிஸார் எத்தனை கொலை செய்தாலும் அவர்களுக்கான தண்டனை இடமாற்றம் என்பதாக நிலைமை இருக்கிறது.

எனவே கொல்லப்பட்ட இளைஞனுக்கு நீதி கிடைப்பதாக இருந்தால் எங்கள் நீதிபரிபாலனம் தலையிட்டால் மட்டுமே அது சாத்தியமாகும்.

### ஐ.எம்.எப் நிதி கிடைக்காவிட்டால்

## இந்த நாட்டை எவராலும் ஒருவாரத்துக்கு கூட ஆட்சி செய்யமுடியாது - பந்துல

(கொழும்பு)

ஐ.எம்.எப் நிதி கிடைக்காவிட்டால் இந்த நாட்டை எவராலும் ஒரு வாரத்துக்குகூட ஆட்சி செய்ய முடியாது என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வேளையின் போது பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை துரதிஷ்டவசமாக தோல்வியடைந்து, கடன் மறுசீரமைப்பும் தோல்வியடைந்தால் எவராலும் இந்த நாட்டை ஒருவாரத்துக்கு கூட ஆட்சி செய்ய முடியாது.

இதுதான் உண்மை. வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு பணிகள் வெற்றிப்பெற்றால் தான் இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகளை இனி முன்னெடுக்க முடியும்

100,000 கிலோமீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தின் கீழ் 13,160 வீதிகளின் (10,848 கிலோமீற்றர்) அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த கருத்திட்டத்தின் கீழ் இதுவரை 5,201 வீதிகளின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையில் 7,959 வீதிகளின் அபிவிருத்தி பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்ட ஒப்பந்தகாரர்களுக்கு இதுவரை 168.3 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது, 5 பில்லியன் ரூபா செலுத்தப்படவுள்ளது.

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தையில் உள்ளதால் வெளிநாட்டு முதலீட்டுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி பணிகள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இலங்கைக்கு இரண்டாம் கட்ட நீடிக்கப்பட்ட கடன் தொகையை வழங்குவது குறித்து சர்வதேச நாணய நிதியம் எதிர்வரும் மாதம் 2 ஆம் திகதி முக்கிய பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளது.

பொருளாதார மீட்சிக்காக தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டம் வெற்றிப் பெற்றால் தான் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 48 மாத கால கடன் ஒத்துழைப்பை வழங்குவதை இந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை துரதிஷ்டவசமாக தோல்வியடைந்து, கடன் மறுசீரமைப்பும் தோல்வியடைந்தால் எவராலும் இந்த நாட்டை ஒருவாரத்துக்கு கூட ஆட்சி செய்ய முடியாது. இதுதான் உண்மை. ஆகவே நாட்டு மக்களுக்கு அரசியல் தரப்பினர் உண்மையை குறிப்பிடவேண்டும்என்றார்.(ம-7)

## கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி ஸ்கான் இயந்திரம் மூலம் பரிசோதனை

### சட்டவைத்திய அதிகாரி வாசுதேவ

(முல்லைத்தீவு)

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியானது எவ்வளவு தூரம் வியாபித்து இருக்கின்றது என்பதனை அறிய எதிர்வரும் 24 ஆம் திகதி விஷேட ஸ்கான் இயந்திரம் மூலம் சோதனையிடபடவுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட விஷேட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியானது இரண்டாவது நாளாக நேற்று இடம் பெற்றது நேற்றைய அகழ்வுப் பணியானது நிறைவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கொக்குதொடுவாய் மனிதப்புதைகுழி இரண்டாவது கட்ட அகழ்வுப்பணி நேற்று இடம் பெற்றிருந்தது. இரு மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டது. அந்த எலும்புக்கூட்டு உடற்பகுதியில் இருந்து துப்பாக்கி சன்னங்கள், குண்டு சிதறல்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் இலக்க தகடு ஆகியன எடுக்கப்பட்டன.

இலக்க தகடுகள் தொடர்பான விடயங்கள் பின்னர் அறியத்தரப்படும். தொடர்ந்து இப்பணி முன்னெடுக்கப்படும். எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை விஷேட ஸ்கான் இயந்திரம் மூலம் இவ் மனித புதைகுழியானது எவ்வளவு தூரம் வியாபித்து இருக்கின்றது. எத்தனை படைகளில் எலும்புக்கூடுகள் அடுக்கப்பட்டிருக்கின்றன எனும் தகவலை அறிவதற்காக விஷேட ஸ்கான் சோதனை நடைபெறும் என்றார்.

களனிபல்கலைக்கழக தொல்பொருள் பீடத்தினரே குறித்த ஸ்கான இயந்திரத்தினை கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,299)

## முறிகண்டியில் ரயிலுடன் மோதுண்ட யானை பலி

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மாவட்டத்தின் முறிகண்டி புகையிரத நிலையத்திற்கு அருகில் யானை புகையிரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகி பலியாகியுள்ளது.

குறித்த விபத்து நேற்று மாலை 6.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த உத்திரதேவி புகையிரதத்துடன் மோதியே விபத்துக்குள்ளானது.

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த பகுதி மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்டமையால், பொலிஸார், வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு புகையிரத அதிகாரிகளால் தகவல் வழங்கப்பட்டுள்ளதை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ம-7,100)

### வடமாகாண மரநடுகை மாதம்

### கார்த்திகை - 2023

**“இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது, மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்.”**

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **வியாழக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** சீனோர் படகுதுறை-காரைநகர் கடற்படைத்தளம்-காரைநகர்,காரைநகர் கடற்படை முகாம். இ.போ.ச களபூமி பாலக்காடு அம்மன் கோவிலடி-காரைநகர். தோப்புக்காடு- காரைநகர், ஊரி-காரைநகர் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் கிராஞ்சி, சிவபுரம், கிராஞ்சி நீர்ப்பாசன சபை. பாலாவி பொன்னாவெளி, வலைப்பாடு. வேராவில் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் அரசன் அரிசி ஆலை, மகாறம்பைக்குளம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் நொச்சிக்குளம், கள்ளிக்கட்டைக்காடு, வட்டுப்பித்தான்மடு, புதுக்காமம், உயிலங்குளம், கமலாம்பிகை அரிசி ஆலை ஆகிய பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பிக்க சர்வதேச நாணய நிதியம் செய்த பரிந்துரைகள் பற்றிய ஒரு மேலோட்ட பார்வை

05

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



இதன் மூலம் வரிவிலக்கு அளிக்கப்படும் நிறுவனங்கள் அதன் பெறுமதி தொடர்பான தகவல்களைப் பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும். அதன் ஊடாக விலைமனு மற்றும் வரிவிலக்கு விடயங்களில் வெளிப்படைத்தன்மையினை ஏற்படுத்த முடியும்.

இன்று அரசியல்வாதிகள் அல்லது அமைச்சர்கள் தமக்கு வேண்டப்பட்ட நிறுவனங்களுக்கு அல்லது நண்பர்களின் நிறுவனங்களுக்கு வரிவிலக்கு வழங்கும் நடைமுறையே காணப்படுகின்றது. அதில் எந்த ஒரு வெளிப்படைத்தன்மையும் பின்பற்றப்படுவதில்லை.

தேர்தல் காலத்தில் பிரசாரச் செலவுகளுக்கு நிதி வழங்கும் நிறுவனங்களுக்கு அதிக வரிவிலக்கினை வழங்குவது ஊழல் மோசடிகள் நிறைந்த தேர்தல் அரசியலின் ஒரு நிரந்தர அம்சமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

### பரிந்துரை-9 அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் சீர்திருத்தக் கொள்கைகள்

அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் சீர்திருத்தக் கொள்கையை நடைமுறைப்படுத்தவும், அதை வைத்திருக்கும் நிறுவனமும் (Holding Company) அதன் ஆலோசனைக் குழுவும் திறமையான, சுதந்திரமான மற்றும் நெறிமுறை ஊழியர்களைக் கொண்டதாக இருப்பதை உறுதி செய்யவும் நிதி அமைச்சகத்திற்கு அறிக்கை பரிந்துரைக்கிறது.

அரசுக்குச் சொந்தமான பொது நிறுவனங்களில் பாரிய நட்டம், ஊழல் மற்றும் மோசடிகள் மலிந்து காணப்படுகின்றன. அவை மறுசீரமைக்க வேண்டிய தேவை மிகவும் அவசரமாகவே காணப்படுகிறது. அவை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு எந்த வகையிலும் பங்களிப்பு செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்தும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. அவை பாரியசுமையாக மாறியுள்ளது என சிலர் விமர்சிக்கின்றனர்.

அவை தொடர்ந்தும் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களாக இருப்பதனால், அவற்றினை மறுசீரமைத்து வினைத்திறன் மற்றும் விளைத்திறனை அதிகரிக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. இந்நிறுவனங்களுக்கு நியமிக்கப்படும் ஆலோசனைச் சபை மற்றும் உத்தியோகத்தர்கள் திறமை, தகுதி கொண்டவர்களாகவும், ஒழுக்கம் மற்றும் சுயாதீனமாகச் செயற்படக்கூடிய இயலுமை கொண்டவர்களாக இருக்க வேண்டும் எனவும் சர்வதேச நாணயநிதிய அறிக்கை குறிப்பிடுகின்றது.

### பரிந்துரை-10 மூலோபாய அபிவிருத்தி திட்டச் சட்டத்தின் பயன்பாட்டை தற்காலிகமாக நிறுத்துதல்

சர்வதேச நாணயநிதிய பிரதிநிதிகள், 2008 ஆம்ஆண்டின் 14 ஆம் இலக்க மூலோபாய அபிவிருத்தித் திட்டச்சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள், முன்மொழிவுகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புச் செலவுகளின் விலையை மதிப்பிடுவதற்கான தெளிவான மற்றும் வெளிப்படையான செயல்முறை அறிவிக்கப்படும் வரை அவை இடை நிறுத்தப்படுவதைக் பரிந்துரைத்துள்ளனர்.

வரிவிலக்குகள் போன்றவை இச்சட்டத்தின் மூலம் செய்யப்படுகின்றன. முறையான கொள்கை வகுக்கும் வரை ஜனாதிபதி அலுவலகம் அதனை இடை நிறுத்துமாறு அறிக்கை பரிந்துரைக்கிறது.

இத்தகைய மூலோபாய அபிவிருத்தி செயற்திட்டங்கள் (Strategic Development Projects) எதனையும் இனி மேற்கொள்ள முடியாதுஎன்பதனையே பத்தாவது பரிந்துரையாக முன்வைத்துள்ளது.

இது தொடர்பாக அண்மைக் காலங்களில் பாராளுமன்றத்தில் உள்ள பொதுநிதி தொடர்பான குழுவிலும் தொடர்ந்தும் பேசப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### பரிந்துரை-11 பாராளுமன்ற அனுமதியின்றி அமைச்சர்களின் வரிவிதிப்பு வரம்பு

பாராளுமன்ற முன் அனுமதியின்றி அமைச்சர்கள் மட்டத்தில் வரிவிதிக்கும் அதிகாரத்தை நீக்கி அல்லது திருத்துவதன் மூலம் வரிச்சட்டங்களைத் திருத்த நிதியமைச்சகத்திற்குப் பரிந்துரைக்கும் அதே வேளையில், வருவாயில் எந்தக் குறைவும் இல்லையென்பதை உறுதி செய்ய சர்வதேச நாணய நிதியம் முன்மொழிகிறது.

அரசநிதி தொடர்பான அனைத்து அதிகாரங்களும் பாராளுமன்றத்துக்கு இருப்பதனால் வரி தொடர்பான விடயங்களில் மாற்றங்கள் செய்யும் போதும் பாராளுமன்றத்தின் அனுமதி அவசியம் என்பது இதன் மூலம் வெளிப்படுகின்றது. எனவே வரி தொடர்பான சட்டத்தைத் சீர்திருத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

### பரிந்துரை-12 நிறுவனங்களின் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்த பொது அறிக்கை

டிசம்பர் 2023இற்குள், இலஞ்சம் கமிஷன் மற்றும் தொடர்புடைய குற்றவியல் விசாரணை செயல்முறைகளுடன் தொடர்புகளை வலுப்படுத்த, ஒவ்வொரு அரசாங்கத்துக்கு வருமானத்தினைப் பெற்றுத்தரும் சகல திணைக்களங்களிலும் குறுகிய கால ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடங்குமாறு அறிக்கை பரிந்துரைக்கிறது.

அவ்வாறு செய்த பிறகு, டிசம்பர் 2024 இற்குள் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் முடிவுகள் குறித்த பொது அறிக்கையை நிதி அமைச்சு வெளியிட வேண்டும் என்று பரிந்துரை மேலும் கூறுகிறது. இப் பன்னிரண்டாவது பரிந்துரை பொறுப்புக்கூறல் செயல்முறையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### பரிந்துரை-13 ஊழியர் சேமலாப நிதிக்கான புதிய நிர்வாக ஏற்பாடுகள்

2024 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் மத்திய வங்கியுடனான ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதியின் முகாமைத்துவத்தை நிதியமைச்சு பூர்த்தி செய்து அதற்கான புதிய நிர்வாக ஏற்பாடுகளை ஏற்படுத்த வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இன்று ஊழியர் சேமலாப நிதி (EPF) தொடர்பான நம்பிக்கை பிரஜைகள் மத்தியில் வெகுவாகக் குறைவடைந்துள்ளது. எனவே ஊழியர் சேமலாப நிதியினைப் பாதுகாப்பதற்கு அவசியமான பொறிமுறை ஒன்றினை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்பதே இப் பரிந்துரையின் அர்த்தமாகும்.

### பரிந்துரை-14 அரச வங்கி செயல்முறையில் திருத்தம்

நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் முறைகளை மேம்படுத்துவதன் மூலம் அரச வங்கிகளின் கூட்டாண்மை நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

அரச வங்கித்துறையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களை நியமிப்பதில் பாரிய அரசியல் தலையீடு மற்றும் வெளிப்படைத்தன்மையின்மை காணப்படுகின்றன. அது ஊழலுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இதை ஒழுப்பதற்கான நடைமுறையையே 14 ஆம் பரிந்துரை எடுத்துக் கூறுகிறது.

அதாவது நிர்வாகத்தை வலுப்படுத்தவும், வங்கித்துறையின் மேற்பார்வை தொடர்பான சட்டம், விதிமுறைகள் மற்றும் செயல்முறைகளில் திருத்தம் செய்யவும் இதன் மூலம் பரிந்துரைக்கப்படுகிறது.

### பரிந்துரை-15 காணிப்பதிவு செயன்முறையினை கணனிமயப்படுத்தல்

இலங்கையில் நாம் காணும் பொதுவான பிரச்சினைகளில் காணி ஊழல் மோசடிகளும் ஒன்றாகும். ஆகவே இந்த நிலைமையைச் சரிசெய்வதற்காகக் காணிப் பதிவு செயன் முறையில் வெளிப்படைத்தன்மையினைக் கொண்டு வருவதற்காகக் காணிப் பதிவினை டிஜிட்டல் பதிவு முறையின் ஊடாக மேற்கொள்ள வேண்டும்.

காணிகளைப் பதிவு செய்வதற்கும், காணி தொடர்பான தகவல்களைப் பொது மக்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெற்றுக் கொள்வதற்கும் ஒரு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என 15 ஆம் பரிந்துரை குறிப்பிடப்படுகிறது.

இதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர முடிவதோடு அவர்கள் காணிகளை இலகுவாக பெற்றுக் கொள்ளவும் முடியும்.

### பரிந்துரை-16 நீதிச்சேவை ஆணைக்குழுவின் வளங்கள் மற்றும் திறன்களை விரிவுபடுத்துதல்

பதினாறாவது பரிந்துரையாக நீதிஅமைச்சு தற்போதுள்ள இலங்கையின் நீதிச்சேவை ஆணைக் குழுவிற்கு ஒதுக்கப்படுகின்ற வளங்களையும், இருக்கின்ற திறன்களையும் விஸ்தரிப்பதற்கு திட்டம் ஒன்றினை உருவாக்கி அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை முன்வைக்கின்றது.

சட்டத்தின் ஆட்சியை அதிகரிப்பதற்காக செய்யப்பட்ட இந்தப் பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 மேலதிக...

திக வாக்குகளால் பாதீட்டின் இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றப்பட்டது.

கடந்த 13ஆம் திகதி நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அடுத்த வருடத்திற்கான பாதீடு முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், 14ஆம் திகதி முதல் பாதீட்டின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்றது.

அதேநேரம், இன்று முதல் 19 தினங்களுக்கு குழுநிலை விவாதம் நடைபெறவுள்ளதுடன், பாதீட்டின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு, எதிர்வரும் டிசம்பர் மாதம் 13ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. (ம-7)

## நினைவேந்தலை...

தடை செய்யக்கோரி மானிப்பாய் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பலாலி பொலிஸாரினாலும் தமது பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மாவீரர் நாள் நினைவேந்தலை தடை செய்ய வேண்டும் என கோரிய மனுவும் மல்லாகம் நீதவான் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை தெல்லிப்பளை மற்றும் அச்சுவேலி பொலிஸாரினால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாவீரர் நினைவேந்தலுக்கு தடை விதிக்க கோரிய மனுக்களும் மல்லாகம் நீதவான் நீதிமன்றினால் தள்ளுபடி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## வடக்கு...

வடக்கு மாகாண அபிவிருத்திக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என வட மாகாண ஆளுநரிடம் எரிக் சொல்ஹெய்ம் உறுதியளித்துள்ளார்.

வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்மிற்கும் இடையிலான விசேட சந்திப்பு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வட மாகாணத்தின் இடர்முகாமைத்துவம், மக்களின் அன்றாட வாழ்வியல் நிலை, காலநிலை, பொருளாதாரம், மாகாணத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆளுநரால் இதன்போது சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்மிற்கு விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

விடயங்களை கேட்டறிந்துகொண்ட ஜனாதிபதியின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கை விஜயத்தின்போது, வடக்கு மாகாண ஆளுநரை முதலில் சந்திக்க கிடைத்தமையையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதாக கூறினார்.

இலங்கையின் வளர்ச்சிக்கான பசுமை திட்டங்களை முன்னெடுப்பதில் தாம் மகிழ்ச்சியடைவதாக சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

சூரிய, காற்றாலை, நீர் மின் உற்பத்திக்கான வளங்களை இலங்கை கொண்டுள்ளமையால், பச்சை ஹைட்ரஜன் (green hydrogen) திட்டத்தை மேற்கொள்ள முடியும் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு தேவையான பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும், ஜனாதிபதியின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், ஆளுநரிடம் உறுதியளித்தார். (ம-7,33,104)

## 5 இலங்கை...

மீனவர்கள் ஐவரை படகுடன் இந்திய கடலோர காவல்படை நேற்று மதியம் கைது செய்து விசாரணைக்காக தமிழக கடலோர காவல் குழுமம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்டவர்கள் மீன் பிடிப்பதற்காக எல்லை தாண்டி வந்தார்களா? அல்லது வேறு ஏதும் கடத்தல் பொருள் கொண்டு வந்தார்களா? என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணை நடத்த உள்ளனர். (ம-7)

## மாவீரர்களின்...

திறந்து வைக்கப்பட்டது.

இதன்பொழுது பொதுச்சுடரினை மூன்று மாவீரர்களின் தாயாரான சிவபாதம் இந்திரவதி ஏற்றிவைத்து மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ் மாநகர முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ச்சியாக சிறுவர் சிறுமியர்களால் மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்லறை திரைநீக்கம் செய்யப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

1982 கார்த்திகை 27 முதல் 2009 வைகாசி 18 வரையான காலப்பகுதியில் தாய் மண்ணின் விடியலுக்காய் வித்தாகியவர்களில் கிடைக்கப்பெற முடிந்த 24,379 வீரர்களின் பெயர்களினை உள்ளடக்கிய கல்லறைகளையும் சில தகவல்களையும் உள்ளடக்கி நினைவாலயம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர், முன்னாள் போராளிகள், சிறுவர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-7,33,104)

## 4 பொலிஸ்...

விக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர், காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் மேலும் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி அடங்கிய குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் அடிப்படையில் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் நான்கு உத்தியோகத்தர்கள் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளார்கள் என இனங்காணப்பட்டதன் அடிப்படையில் அவர்கள் நால்வரும் தற்பொழுது மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் கட்டுப்பாட்டில் உள்வாங்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விரைவில் குறித்த சம்பவத்துடன்தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.

அதேவேளை இந்த விடயம் தொடர்பில் பொலிஸ்மா அதிபரினாலும் எமக்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் தற்பொழுது வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய நான்கு உத்தியோகத்தர்களும் இடமாற்றப்பட்டுள்ளார்கள். அவர்கள் அங்கு கடமையாற்றினால், அங்குள்ள ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை அழித்து விடுவார்கள் என்ற காரணத்தினால் அவர்கள் இடம்மாற்றப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

எனவே இந்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் குழப்பமடையத் தேவையில்லை. பொலிஸ் உயர் மட்டத்தில் விசாரணைகளை விரைவாக செயற்படுத்துமாறு பணித்துள்ளோம் என தெரிவித்தார். (ம-7,33,104)


தன நிதானய
திகதி - 2023.11.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1335
C 40 42 47 62 C
48057

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3547
சீட்டிழுப்பு திகதி 21.11.2023
K 17 35 40 79
K 58677

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.21
சீட்டிழுப்பு இலக்கம் 614
தனுசு 04 21 37 47 தனுசு
04759 25

மஹஜன சம்பத
திகதி 2023/11/21
சீட்டிழுப்பு இலக்கம் 5305
F 9 6 9 5 3 8

மெகா பவர்
திகதி 21/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1653
L 17 42 66 74 79
38391

லக்கி 7
திகதி 21.11.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0131
L7 இலக்கம் 3 6
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
மகரம் 0 5 0 9 9 1

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2279 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.11.21 தினம் செவ்வாய்க்கிழமை
03 05 32 64 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,418,564/-

சனிதா
திகதி 2023.11.21 வெற்றி வாரம் 4440 வர்ணம் பச்சை
12 40 44 70 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,532,748.00

சசிரி
வெற்றி வாரம் 405
சீட்டிழுப்பு திகதி 2023.11.21
09 27 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,897,160/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3991 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.11.21 தினம் செவ்வாய்க்கிழமை
23 38 41 59 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,720,420/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 18 01 19 63 68
1455
2023.11.21 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 467,861,174.20

செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2105
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,712,952/-
சீட்டிழுப்பு திகதி : 2023.11.21
அட கோடீபதி ADA KOTIPATHI
05 20 65 73 V

உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 21.11.2023 வெற்றி வாரம் 013 வர்ணம் சிவப்பு
J 9 9 0 6 5 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,849,772.80
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 பில்லியன் ரூபாய் தேர்தலுக்கு ஒதுக்கீடு

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

எதிர்காலத்தில் நடத்தப்படும் தேர்தல்களுக்காக 10 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அது வரவு செலவுத் திட்டத்தில் நேரடியாக குறிப்பிடப்படாவிட்டாலும் கூட மதிப்பீட்டு ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இலங்கைக்கான நீடிக்கப்பட்ட கடன் வசதியின் இரண்டாம் தவணையை விடுவிப்பது தொடர்பில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 6ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதில் பல்வேறு சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. 2023 ஆம் ஆண்டில் எமது வருமானம், நிர்ணயித்த இலக்குத் தொகையில் 16% குறைவடைந்தது. வீழ்ச்சியடைந்த பொருளாதார ஆண்டில், எதிர்பார்த்த இலக்கைப் பூர்த்தி செய்ய முடியாமல் போவது இயல்பானதொரு நிலையாகும்.

வரவு செலவுத் திட்ட ஆவணத்தைத் தயாரிக்கும் போது, முதன்மைக் கணக்கை மேலதிகமாக வைத்திருக்கும் இலக்குடன் நகர்வதில் கடுமையான தடைகளை நாம் எதிர்கொள்கிறோம். மேலும், வருமானத்தை விட அதிக செலவுகள் ஏற்படுவதனால் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையுடன் செயற்பட வேண்டியுள்ளது என்றார். (ம-7)

## நாட்டை பாதாள...

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்த அவர், பாராளுமன்றில் கதைக்கும் பலர், அவர்களது ஆட்சிக் காலத்தில் எவ்வாறு செயற்பட்டார்கள் என்பதை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

சர்வதேச நாணய நிதியம், நாட்டுக்கு பரிந்துரைகளை விதித்துள்ளது. இவற்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

மக்களுக்குத் தேவையான நாட்டை நாம் உருவாக்க வேண்டுமே ஒழிய, எதிர்ப்புக்களை வெளியிட்டு நாட்டை மீண்டும் பாதாளத்திற்குள் தள்ள முற்படக்கூடாது.

எதிர்ப்பினை வெளியிடும் தரப்பினர், அன்று சவாலை ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை.

இன்று வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது என்பதை நாமும் அறிந்துக் கொண்டுள்ளோம்.

இதிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் செயற்பாட்டையே இந்த வரவு - செலவுத் திட்டம் முன்வைத்துள்ளது" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ஆளுந் தரப்பின...

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உரையாற்றிய போது சபையில் அமளிதுமளி ஏற்பட்டதையடுத்து சபை நடவடிக்கைகள் 5 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

பொருளாதார நெருக்கடிக்கு உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றிக் கொண்டிருந்தபோது, அதில் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களின் பெயர்களை உச்சரித்தார்.

பொருளாதாரப் பாதிப்புக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப் படும் நடவடிக்கை என்ன? என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ 27/2 கீழ் எழுப்பிய கேள்விக்கு ஆளும் தரப்பினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்து களேபரத்தில் எதிர்க்கட்சித் தலைவரைச் சுற்றிவளைத்த ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர் கைகளிலிருந்த ஆவணத்தையும் பறித்துச் சென்றுள்ளதுடன் அவரைப் பேசவிடாது ஒலிவாங்கியைப் பறித்து இடையூறுகளை ஏற்படுத்தினர்.

இதையடுத்து பாராளுமன்ற சபை நடவடிக்கைகள் 5 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டன. இதேவேளை, தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து ஆளும் தரப்பினர் சபை நடுவில் வந்து எதிர்க்கட்சித் தலைவரின் உரைக்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

ஆளும் தரப்பினரது செயற்பாடுகளைப் பிரதமர் தினேஷ் குணவர்த்தன அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆளும் மற்றும் எதிர்த்தரப்பினருக்கு இடையில் இடம்பெற்ற அமளிதுமளியால் கலரியில் அமர்ந்திருந்த பாடசாலை மாணவர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

அமளிதுமளியையடுத்து சபை நடவடிக்கை கூடிய போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் உரையை இடைமறித்த சனத் நிஷாந்த உள்ளிட்ட ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார். அதற்குப் பதிலளித்த சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, இது தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என்றார். (ம-7)

(மற்றுமொரு செய்தி உள்ளே)

Canada and Italy Visa
(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும். மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
Visa Consultant
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
077 038 5584 (17936)

விரைவு பொதிகள் சேவை
DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.
Lanka Cargo Worldwide Express
இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
070 375 0002 (17936)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17944)
076 825 7716 (ஆகாஸ்)


வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL
சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (17945)

ENGLISH for Gr. 6 - O/L
P.THARMAKUMARAN (P.Mathan)
BA(Eng.Lit), Dip.in.Eng
NEWTON Group Classes
18/18, Wyman Road, Nallur.
TP: 077 792 3653 (17946)

பணியாளர் தேவை
யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு முழுநேரமாக (பகல்) பணியாற்றக் கூடிய சுத்திகரிப்புப் பணியாளர் (பெண்) தேவை.
(வயது 30 - 50)
யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை
தொடர்புகளுக்கு
076 097 3121

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-7695)
V2 TRAVELS
எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

CANADA VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7695)
0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS



உ
ஓம் சாய் ராம்
கருணையூர் ஸ்ரீ அபய சீரடி சாய்நாதர் ஆலயம்
கார்த்திகை தீப திருநாளை முன்னிட்டு இடம்பெறும்
இலட்ச தீப வழிபாடு
26.11.2023 அன்று மேற்படி
ஆலயத்தில் காலை 8 மணிமுதல் இடம்பெறும்
பங்கெடுத்து பலன் பெற அன்போடு அழைக்கின்றோம்.
ஊடக அனுசரணை:
பிள்ளையார் மெடிக் கெயார்
ஆவரங்கால், புத்தூர்.
கரணவாய்,
கரவெட்டி.
தகவலுக்கு:
077 389 1421 (17953)



இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org